# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 14 வள்ளுவர் ஆண்டு 2029 மார்கழி 28 செவ்வாய்க்கிழமை (12-01-1999) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 40


## 6 பேர் மட்டும் நான்கு 'ஏ' சித்தி

### ஜி.சீ.ஈ. பெறுபேறு வீழ்ச்சி

கொழும்பு, ஜன. 12

நேற்றுவெளியான ஜி.சீ.ஈ. (உயர் தரம்) பரீட்சை முடிவுகளின்படி யாழ். மாவட்டப் பெறுபேறுகள் மிகவும் வீழ்ச்சி நிலையில் காணப்பட்டதாகத் தெரியவருகின்றது.

யாழ். மாவட்டத்தில் பாடசாலைப் பரீட்சார்த்திகளில் ஆறு பேருக்கு மட்டுமே நான்கு பாடங்களிலும் 'ஏ' பெறுபேறு கிடைத்துள்ளது.

ஹாட்லி கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி ஆகியவற்றில் தலா இருவரும் - உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி ஆகியவற்றில் தலா ஒருவரும்—

(10 ஆம் பக்கம் பார்க்க)

## சில அத்தியாவசியப் பொருள்களுக்கு வர்த்தக சம்மேளனம் விலை நிர்ணயம்

### நிலைமையை விளக்கி அறிக்கை

மொத்த வியாபாரிகள் இருவரிடம் இருந்து தாம் பெற்ற சில அத்தியாவசியப் பொருள்களின் விற்பனை விலைகளை யாழ் மாவட்ட வர்த்தக சங்கங்களின் சம்மேளனம் வெளியிட்டிருக்கிறது. அந்த விலைகளை அனுசரித்து அவற்றை விற்குமாறு வர்த்தகர்களை அது கோரி உள்ளது.

'யாழ்ப்பாணத்தில் யானை விலையில் பொருள்கள்— கட்டுப்படுத்தி உதவுவது யாரின் பொறுப்பு?' என்ற தலைப்பில் கடந்த வார சஞ்சிகையில் 'உள்ளும் புறமும்' கட்டுரைத் தொடரில் வெளியான தகவல்கள் தொடர்பாக — வர்த்தகர்களின் நிலைப்பாட்டை — நிலைமையை — விளக்கி சம்மேளனம் வெளியிட்டுள்ள நீண்ட அறிக்கையிலேயே சில பொருள்களின் விலை விவரமும் வெளியிடப்பட்டிருக்கிறது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

(9 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் ஆயுத விநியோக மைய நிலையம் தாய்லாந்து!

## லக்ஷ்மன் கதிர்காமர் குற்றச்சாட்டு ஆனால் அந்நாடு மறுக்கின்றது

பாங்கொக், ஜனவரி 12

இலங்கைக்கு ஆயுதங்களைக் கடத்துவதற்கான மத்திய தளமாக தாய்லாந்தை விடுதலைப் புலிகள் பயன்படுத்தி வருகின்றனர் என்று வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் குற்றஞ்சாட்டி உள்ளார். அவரது குற்றச்சாட்டை தாய்லாந்து வெளியுறவுத்துறை அமைச்சர் மறுத்துள்ளார்.

அமைச்சர் கதிர்காமரின் குற்றச்சாட்டை 'தநேஷன்' என்ற தாய்லாந்து பத்திரிகை வெளியிட்டிருக்கின்றது.

விடுதலைப் புலிகள் தாய்லாந்தைத் தளமாகப் பயன்படுத்துவது குறித்து கடந்த 1996, 97 ஆம் ஆண்டுகளில் பாங்கொக் அரசுக்கு இலங்கை சுட்டிக் காட்டியிருந்தது. எனினும் அது தொடர்பாக பாங்கொக் பதில் எதுவும் தெரிவிக்கவில்லை.

தாய்லாந்துடன் இலங்கை சிறந்த உறவுகளைப் பேணி வருகின்றது. புலிகள் தமது நடவடிக்கைகளுக்குத் தாய்லாந்தைப் பயன்படுத்துவது குறித்து அது கவலை கொண்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ரெலோ உறுப்பினர் சுட்டுக் கொலை

யாழ்ப்பாணம், ஜன. 12

ரெலோ அமைப்பைச் சேர்ந்த வல்வெட்டித்துறை நகரசபை உறுப்பினர் ஜேக்கப் அன்ரனி பீற்றர் என்பவர் நேற்று மாலை 7 00 மணியளவில் நெல்லியடிப் பகுதியில் வைத்து இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டதாகத் தெரியவந்தது. (உ-6-21)



அப்ப 'தொல்லை' பேசி எண்டு சொல்லுங்கோ......!

## ஓட்டோ கடத்தப்பட்டது

தென்மராட்சி, ஜன. 12

பாதுகாப்பு அரணுக்கு வெளியே உள்ள நோயாளர் ஒருவரை கொண்டுவருவதற்கென சாவகச்சேரியிலிருந்து அழைத்துச் செல்லப்பட்ட ஓட்டோ இனந்தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்டுள்ளது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## போதைப்பொருள் வியாபாரி சுட்டுக் கொலை!

கொழும்பு, ஜன. 12

போதைப் பொருள் வியாபாரி எனக் கூறப்படும் நபர் ஒருவர் நேற்று அதிகாலை கொழும்பு கொட்டாஞ்சேனையில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார்.

மனேஜ் பிரியதர்ஷன் பெரேரா என்ற மேற்படி நபர்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## இளைஞனின் சடலம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், ஜன. 12

புத்தூர் பகுதியில் கடந்த ஞாயிறு இடம்பெற்ற மோதல் ஒன்றில் கொல்லப்பட்டதாகக் கூறப்படும் இளைஞன் ஒருவனின் சடலம் நேற்று

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தொலைபேசிச் சேவை மாத இறுதிக்குள் சீராகும்!

### பொறியியலாளர் தகவல்

யாழ்ப்பாணம், ஜன. 12

யாழ். குடாநாட்டுக்கும் வெளியிடங்களுக்கும் இடையிலான தொலைபேசிச்சேவைகளை சீராக — தடங்கல்கள் இன்றி—இயங்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பெரும்பாலும் இம்மாத இறுதிக்குள் அது சீராக இயங்கத்தொடங்கிவிடும்.

'ரெலிக்கொம்' நிறுவனத்தின் யாழ். பிரதேச பொறியியலாளர் த. பாலசுப்பிரமணியம் மேற்கண்டவாறு

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஒரு வாரத்தில் சீராக்க கோரி மறியல் போர்!

### புளொட் நடத்தும்

யாழ்ப்பாணம், ஜன. 12

குடாநாட்டில் தொலைபேசிச் சேவை இன்னும் ஒரு வார காலத்துக்குள் சீர் செய்யப்படாவிட்டால் மறியல் போராட்டம் ஒன்றை நடத்தப்போவதாகப் புளொட் அமைப்பு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக ஸ்ரீலங்கா 'ரெலிக்கொம்' நிறுவனத்தின் வடக்கு — கிழக்கு பிராந்தியத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொது முகாமையாளருக்கு புளொட் அமைப்பின் யாழ். மாவட்ட அமைப்பாளர் செ. கிருபைராஜா 'பக்ஸ்' செய்தி ஒன்றை நேற்று அனுப்பியுள்ளார்.

போக்குவரத்துத் தொடர்புகள் இன்றித் தனித்துப்போய் விட்ட குடாநாட்டு மக்கள் வெளியிடத் தொடர்புகளுக்குத் தொலைபேசியையே

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஓமந்தை மின் கோபுரம் அதிகாலை தகர்ப்பு!

வவுனியா, ஜன. 12

ஓமந்தையில் புதிதாக நிறுவப்பட்ட மின் கோபுரம் ஒன்று நேற்று அதிகாலை இனந்தெரியாத நபர்களால் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது.

'வெற்றி உறுதி' படை நடவடிக்கை மூலம் கைப்பற்றப்பட்ட பிரதேசங்களுக்கு மின் விநியோகத்தை வழங்குவதற்காக இந்த மின் கோபுரம் நிறுவப்பட்டது.

புளியங்குளம் வரையான மின் விஸ்தரிப்பு வேலைகள்

(10 ஆம் பக்கம் பார்க்க)

### யானை படகைக்கவிழ்த்தது

## இன்ஸ்பெக்டர் உட்பட மூவர் குளத்தில் மூழ்கினர்!

அம்பாறை கொண்டை வெட்டுவான் குளத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற படகு விபத்து ஒன்றில் பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர் உட்பட மூவர் நீரில் மூழ்கி உயிரிழந்து விட்டதாக அஞ்சப்படுகிறது.

அம்பாறை பொலீஸ் பயிற்சிக் கல்லூரி இன்ஸ்பெக்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். அரச அதிகாரிகள் புலிகளுக்கு உதவியாம்

### 'திவயின' குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 12

குடாநாட்டில் சிவில் நிர்வாகத்தைச் சீர்குலைக்கும் முயற்சியில் அங்குள்ள அரச அதிகாரிகள் ஈடுபட்டு வருவதாக 'திவயின' சிங்களப் பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் சிவில் நிர்வாகத்தைக்குழப்புவதற்கு அரச நிர்வாக அதிகாரிகள்

(10 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# மரண அறிவித்தல்கள்

## திருமதி மரகதம் கனகலிங்கம்

நாவற்குழியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாக
வும் கொண்ட திருமதி மரகதம் கனகலிங்கம் 11-01-99
அன்று காலமாகிவிட்டார்.
இவர் கனகலிங்கத்தின் அன்பு மனைவியும், அன்ன
முத்து, காலஞ் சென்ற சிவக்கொழுந்து ஆகியோரின்
அன்புச் சகோதரியும், நேசமலர், வாகீஸ்வரன்,
நாகேஸ்வரன், லீலாவதி, யோகேஸ்வரன், புஸ்பவதி,
தவபாலன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயா
ரும், சத்தியசீலன் (டாக்டர்), விஜயலட்சுமி, ரேவதி,
இராசரத்தினம் (லண்டன்), சின்றல்லா (ஆசிரியை,
கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம்), இளமுரு
கன் ஆகியோரின் அன்பு மாமியாரும், சத்தியமலர்,
சத்தியநேசன் (சுவிஸ்), சத்தியநாதன் (சுவிஸ்), சத்திய
மாலா (சுவிஸ்), சத்தியராணி, பிரியா, பிறேமியா,
பிரபாலினி, கௌசிகா, தர்சிகா, ரிசிகா, துளசிகா,
ஜனுஸ்கா, சிஜானுகா, லர்ஷிகா, கர்சாந், விஷ்ணுகா,
தர்மகுலசிங்கம் (சுவிஸ்) ஆகியோரின் பேர்த்தியும்,
டினுஷாவின் (சுவிஸ்) பாட்டியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று காலை
10 மணியளவில் நாவற்குழியில் நடைபெறும்.
இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்
கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**வே. கனகலிங்கம்**
(கணவர்)

கேரதீவு வீதி,
நாவற்குழி,
கைதடி.

(62082)

## விசுவர் பொன்னையா

(இளைப்பாறிய அதிபர்)

கரவெட்டி கிழக்கு "மதியொளி வாசா" வைச்
சேர்ந்த இளைப்பாறிய அதிபர் விசுவர் பொன்னையா
1999 – 01 – 10 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.
அன்னார் அமரர் மனோன்மணியின் அன்புக்
கணவரும், நீலாயதாட்சி, பொன்மயிலாம்பிகை
(கனடா), சவுந்தரநாயகி (இந்தியா), அருந்தவ
நாயகி, ஆனந்தநாயகி (தொலைத் தொடர்புத்
திணைக்களம்) ஆகியோரின் அன்புத் தந்தையும்,
அ, ஈசுரபாதம், வே. கணநாதன் (கனடா), கா. விஷ்
ணானந்தமூர்த்தி ஆகியோரின் அன்பு மாமனாரும்,
அருள்பிருந்தா, சுயாதா, தர்மினி, நரேந்திரன்,
நிறஞ்சா, முருகதாசன், முரளிதாசன் ஆகியோரின்
அன்புப் பேரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் 10 – 01 - 1999
ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்
றன.

தகவல்:
**அ. ஈசுரபாதம்**
(மருமகன்)

"மதியொளி வாசா"
கரவெட்டி கிழக்கு.

(62100)

## திருமதி கனகரத்தினம் பூமணி

அம்மன் வீதி, கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும்
வதிவிடமாகவும் கொண்ட திருமதி கனகரத்தினம்
பூமணி காலமாகிவிட்டார்.
அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி கனகரத்
தினத்தின் (கட்டட ஒப்பந்தக்காரர்) அன்பு மனைவி
யும் முன்னாள் கட்டட ஒப்பந்தக்காரர் காலஞ் சென்ற
ஜெபநாதனின் அன்புத் தாயாரும் சாரதாதேவியின்
அன்பு மாமியாரும் ஜெயபாலேந்திரன் (கனடா),
ரஞ்சித் (ஹொலண்ட்), ராஜேந்திரா ஆகியோரின்
அன்புப் பேர்த்தியும் ஆவார்.
அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து
தகனக் கிரியைகளுக்காக இன்று (12-01-1999) செவ்
வாய்க்கிழமை காலை 9-00 மணியளவில் கோம்பயன்
மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள்
அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**ஜெ. ராஜேந்திரா**
(பேரன்)

69, அம்மன் வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

(62101)

## திருமதி சங்கரப்பிள்ளை சிவக்கொழுந்து

காரைநகர் தங்கோடையைப் பிறப்பிடமாகவும்
வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்
பிள்ளை சிவக்கொழுந்து 10-01-99 ஞாயிற்றுக்கிழமை
வவுனியாவில் காலமானார்.
அன்னார் வேலுப்பிள்ளை சின்னக்குட்டியின்
அருமை மகளும் காலஞ்சென்ற S. R. சங்கரப்பிள்
ளையின் அன்பு மனைவியும், குலசேகரம் மீனாட்சி,
பொன்னம்மா, காலஞ்சென்றவர்களான தம்பிப்
பிள்ளை, முத்துக்குமாரு, சண்முகம், சடாசிவம்,
பாலசுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரி
யும் பரமேஸ்வரி, சரஸ்வதி, குணமணி, இராமச்சந்
திரன் (மலிபன்) இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புத்
தாயாரும், காலஞ்சென்ற சண்முகநாதன், திருநாவுக்
கரசு, பகவத்சிங், லலிதாம்பிகை, பாலசுப்பிரமணியம்
ஆகியோரின் மாமியாரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் 11—01—99 திங்கட்
கிழமை வவுனியாவில் நடைபெற்றன.
இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்
கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்
கொள்கின்றோம்.

தகவல்:
**திருமதி சண்முகநாதன் பரமேஸ்வரி**
(மகள்)

பயிரிக்கூடல்,
காரைநகர்.

(62017)

## மத்திய கல்லூரியில் விவேகானந்தர் ஜெயந்தி விழா

யாழ்ப்பாணம், ஜன. 12
அனைத்திலங்கை இந்து
வாலிபர் சங்கமும் யாழ்.
மத்திய கல்லூரி இந்து மாமன்
றமும் இணைந்து நடத்தும்
சர்வசமய சமரசத்தை நெறிப்
படுத்தும் சுவாமி விவே
கானந்தரது ஜெயந்தி தின
விழா இன்று காலை 9 மணிக்கு
யாழ். மத்திய கல்லூரி தம்பர்
மண்டபத்தில் நடைபெறவுள
ளது.
அனைத்திலங்கை இந்து
வாலிபர் சங்கப் பொதுச்
செயலர் த. மனோகரன்
தலைமையில் நடைபெறும்
இந்த நிகழ்வில் நல்லை ஆதீன
குரு முதல்வர் சோமசுந்தர
பரமாச்சாரிய சுவாமிகள்,
வண. பிதா. கருணாராஜ்
அடிகள், எம்.யு. எம். தாஹிர்
ஆகியோர் அருளுரை வழங்
குவர்.
தொடர்ந்து ஆரம்ப உரை
யினை பாடசாலை அதிபர்
க. இராசதுரையும் ஆசியுரை
களை யாழ். பல்கலைக்கழக
துணைவேந்தர் பொ. பால
சுந்தரம்பிள்ளை, யாழ்ப்பாண
கல்வி வலயப் பணிப்பாளர்
கலாநிதி என். தணிகாசலம்
பிள்ளை ஆகியோரும் சிறப்
புரையை யாழ். ஸ்கந்தவ
ரோதயக் கல்லூரி ஆசிரியர்
ஆறுதிருமுருகனும்வழங்குவர்.
இசை நிகழ்ச்சிகளும் இடம்
பெறும். (ஐ-6)

**கலைவாணி**
**கல்வி நிறுவனம்**
**வல்லை வீதி, யாழ்ப்பாணம்.**

**SPOKEN ENGLISH with GRAMMAR**

By:
P. PIRAGASH

ஆரம்பம்: 23—01—99
2.00 மணி

★ அளவையியல் விசேட
வகுப்பு 3.00 மணி.

மாணவர்கள் எண்ணிக்கை
வரையறுக்கப் பட்டுள்ளது.

—நிர்வாகி

(62096)

**லிபேட்டி தியேட்டர்**
அச்சுவேலி
செவ்வாய் முதல்
வியாழன் வரை
**ரஜனி, ஸ்ரீதேவி**
நடித்த
**நான் அடிமையில்லை**
காட்சிகள்;- 10.30, 2.30
T. P. No. 070—212223
(62006)

**ராஜா**
யாழ்ப்பாணம்.
**நெப்போலியன், நாசர்**
**தேவயானி, மணிவண்ணன்**
நடித்த
**கிழக்கும் மேற்கும்**
இரண்டாவது வாரம்
10-30, 2-30
[சி/5958]

**நாகம்ஸ்**
**சினிமா**
**சுன்னாகம்.**
**அஜித், தேவயானி**
நடித்த
**காதல்கோட்டை**
10-30, 2-30
(62066)

# மரண அறிவித்தல்கள்

## இராமலிங்கம் பொன்னையா

(புதினப் பத்திரிகை விற்பனையாளர், தெல்லிப்பளை)

தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகக் கொண்ட
இராமலிங்கம் பொன்னையா 11-1-99 அன்று கால
மாகிவிட்டார்.
அன்னார் காலஞ்சென்ற பொ. செல்லம்மாவின்
அன்புக் கணவரும் வசந்தமலர், ஜெயமலர், வசந்த
ராணி, ஜெயதேவி, காலஞ்சென்ற விமலாதேவி மற்
றும் தவராஜா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தை
யும் முருகையா (தபாற் கந்தோர், தெல்லிப்பளை)
கனகலிங்கம் (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், C.T.B),
கமலநாதன் (மின் இணைப்பாளர்), குணசேகரம்
(சிமெந்துக் கூட்டுத்தாபனம்), செல்வராஜா (லங்கா
சிமெந்து நிறுவனம்), பராசக்தி (ஜேர்மனி) ஆகியோ
ரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான
கதிரவேலு, நாகம்மா மற்றும் சின்னம்மா ஆகியோரின்
அன்புச் சகோதரரும் முரளிதரன் (லண்டன்), கிருபா
கரன் (ஜேர்மனி), பிரபாகரன் (லண்டன்), பாலதரன்
(லண்டன்), வாசன் (லண்டன்), மயூரன், குகரூபன்,
ஜெயரூபன் (மகாஜனக் கல்லூரி மாணவர்கள்)
செந்தூரன் (ஜேர்மனி), விஜித்தா (நோர்வே), ஜெய
சூரியன் (நோர்வே), அஜித்தா, வினோதா, சிந்துஜா
(யூனியன் கல்லூரி), சுமித்தா (யா/றோமன் கத்
தோலிக்கப் பாடசாலை) ஆகியோரின் அன்புப் பேர
னும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12-1-99)
பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில்
நடைபெறும்.
இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள்
அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
**பொ. குணசேகரம்**
(மருமகன்)

லவ் லேன்,
உடுவில்.

(62092)

## அம்பலவாணர் பேரம்பலம்

சரவணை மேற்கு வேலணையைச் சேர்ந்தவரும்,
அம்மன் வீதியை வசிப்பிடமாகக் கொண்டவருமான
அம்பலவாணர் பேரம்பலம் 10 - 01 - 1999 ஞாயிற்
றுக்கிழமை காலமானார்.
அன்னார் யோகம்மாவின் அன்புக் கணவரும்,
காலஞ்சென்ற அம்பலவாணர் — அன்னம்மா தம்பதி
களின் மகனும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் தம்பதி
களின் மருமகனும், திருமதி இராசரத்தினம் யோகம்
மாவின் அன்புச் சகோதரரும், திருமதி வனிதா, சிவ
குமாரன் (பிரான்ஸ்). உதயகுமார் (பிரான்ஸ்),
திருமதி தமயந்தி (பிரான்ஸ்), மகிந்தகுமார்
(பிரான்ஸ்), ஈஸ்வரி, கணேஸ்குமார் (யாழ். பல்
கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கனக
சபை, விஜிதா (பிரான்ஸ்), சுதாராணி (பிரான்ஸ்),
சந்திரகுமாரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாம
னாரும், இராசரத்தினத்தின் (விஜிதா மில், தாவடி)
அன்பு மைத்துனரும், வேணுகோபால், ஆதித்தன்,
சயந்தினி, பிரான்ஸில் வசிக்கும் லக்ஷ்மன், விதுஷன்,
வினிதா, கஜனி, தனுஷா, அபிநயா, விதுரன் ஆகி
யோரின் அன்புப் பேரனுமாவார்.
அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று
(11 – 01 – 1999) திங்கட்கிழமை கோம்பயன் மணல்
மயானத்தில் நடைபெற்றன.
இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்
பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**பே. கணேஷ்குமார்**
(மகன்)

70, அம்மன் வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

(62109)

## வைத்திய கலாநிதி செல்லப்பா நடராசா

மூளாயைப் பிறப்பிடமாகவும் சிலாபத்தை வதி
விடமாகவும் கொண்ட வைத்திய கலாநிதி செல்லப்பா
நடராசா 10—01—99 இல் சிவபதமடைந்துள்ளார்.
அன்னார் காலஞ்சென்ற வைத்திய கலாநிதி
செல்லப்பா—செல்லம்மா தம்பதிகளின் ஏகபுத்திரனும்,
காலஞ்சென்ற திரு. திருமதி விசுவநாதர் தம்பதிகளின்
அன்பு மருமகனும் காலஞ்சென்ற திருமதி நடராசா—
யோகேஸ்வரிதேவியின் அன்புக் கணவரும், திருமதி
தி. விக்னேஸ்வரி (சிலாபம்), திரு. ந. யோகராசா
(அமெரிக்கா கணனி பகுப்பாய்வாளர்), திரு. ந.
மோகனராஜன் (ஜேர்மனி), திரு. ந. மதனராஜன்
(கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் திரு.
சு. திருநாவுக்கரசு (சிலாபம்), திருமதிகள் யோ. ஜீவினி
மோ. பவானி, ம. கமலாசினி ஆகியோரின் அன்பு
மாமனாரும், வானதி, அபிவர்ஷினி, ஆர்த்திகா,
அபிலாஷா, பிரணவன், சுருதி, பிரவீன், அஸ்வினி
ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற வி.
சங்கரலிங்கம் (கணக்காளர், கொழும்பு), காலஞ்சென்ற
வி. அமிர்தலிங்கம் (சினிமாஸ் லிமிட்டெட் விகிதர்),
திருமதி தவஈஸ்வரி—நல்லலிங்கம் (கொழும்பு). திரு.
வி. தனலிங்கம் (இளைப்பாறிய அதிபர்) ஆகியோரின்
அன்பு மைத்துனரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் 11-01-99 திங்கட்
கிழமை சிலாபத்தில் நடைபெற்றன.
இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்
கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்
கொள்கின்றோம்.

தகவல்:
**திரு. வி. தனலிங்கம்**
(மைத்துனர்)

179/5, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

(62110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிக்கும்
# போக்குவரத்துச் சபை பஸ் சேவை
## டிப்போக்களை இயங்க வைக்க முயற்சி

கொழும்பு, ஜன. 12

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் சேவை இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப்பகுதிக்கும் விரைவில் விஸ்தரிக்கப்படவிருக்கின்றது

கிளிநொச்சி, முல்லைத்தீவுப் பகுதிகளில் ஏற்கனவே செயற்பட்டு வந்த டிப்போக்களை மீள இயங்கச்செய்யவும் —

வவுனியா, மன்னார்ப் பகுதிகளில் இருந்து அந்தப் பிரதேசத்துக்கு பஸ் சேவையை நடத்தவும் — முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அங்கு நிலவும் போக்குவரத்துப் பிரச்சினைகள் தொடர்பாகக் கிடைத்துள்ள முறைப்பாடுகளை அடுத்து இந்த விடயம் குறித்து உயர் மட்டத்தில் ஆராயப்படுவதாகவும் —

விரைவில் அந்தச் சேவை ஆரம்பிக்க சாத்தியம் உள்ளது என்றும் — தெரிவிக்கப்பட்டது.

(இ-3)

# வடக்கு - கிழக்குக்கு 75 பஸ்கள் கையளிப்பு

கொழும்பு, ஜன. 12

வடக்கு — கிழக்கு மாகாணத்துக்கு 75 பஸ்கள் போக்குவரத்து அமைச்சர் பௌசியால் அந்த பிரதேச பொது முகாமையாளர்களிடம் கடந்த வியாழக்கிழமை கையளிக்கப்பட்டன.

வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்கு 53 பஸ்களும் —

கிழக்குப் பிராந்திய கொத்தணி சபைக்கு 23 பஸ்களும்— வழங்கப்பட்டுள்ளன.

இந்த பஸ்களை கையளிப்பது தொடர்பாக போக்குவரத்து அமைச்சில் நடந்த வைபவத்தில் கலந்துகொண்ட வடபிராந்திய போக்குவரத்துச்சபை பொது முகாமையாளர் வி. எஸ். சொக்கலிங்கம் வடக்குக்கான 52பஸ்களையும் அமைச்சர் பௌசியிடம் இருந்து பொறுப்பேற்றுக் கொண்டார்.

இந்த வைபவத்தில் மத்திய போக்குவரத்துச் சபைத் தலைவர் றமாஸ் சிறிவர்த்தன பிரதி அமைச்சர் அபூபக்கர், புளொட் அமைப்பின் தலைவரும், வன்னி நாடாளுமன்ற உறுப்பினருமான த. சித்தார்த்தன், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சுமதிபால மற்றும் வடமாகாண மீள் குடியமர்வு அதிகார சபை அதிகாரி ஆகியோர் கலந்து கொண்டனர்.

வவுனியாவுக்கு 4 பெரிய பஸ்களும், 4 கிராமிய பஸ்களும், மன்னாருக்கு 4 பெரிய பஸ்களும் வடபிராந்திய போக்குவரத்துச் சபைப் பொது முகாமையாளர் வி. எஸ். சொக்கலிங்கத்தால் வன்னி கொத்தணியின் முகாமைத்துவப் பணிப்பாளர் நஜிமிடம் கையளிக்கப்பட்டன.

யாழ்ப்பாணத்துக்கான 40 பஸ்களும் அடுத்த மாத முடிவுக்குள் யாழ்ப்பாணத்துக்கு கப்பல் மூலம் எடுத்து வர ஏற்பாடாகியுள்ளது. (இ-3)

## சிரமதானம்

கொழும்புத்துறை, ஜன. 12

சரசாலை — நுணுவில் அருள்மிகு ஸ்ரீ சிதம்பர விநாயகர் ஆலய சுற்றுப்புற வீதிகளை அண்மையில் சரசாலை இந்து மன்றத்தினரும், சரசாலை கணேச வித்தியாலய மாணவர்களும் இணைந்து சிரமதானம் மூலம் துப்புரவு செய்தனர்.

ஆலய பரிபாலன சபைத் தலைவர் க. சிவசங்கரநாதன் தலைமையில் சிரமதானம் இடம்பெற்றது.

(இ-30)

## வலி. மேற்கு பிரதேச சபைக்கு இலச்சினை

யாழ்ப்பாணம், ஜன. 12

வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்குப் பொருத்தமான இலச்சினை ஒன்றை தயாரித்துத் தருமாறு வலிகாமம் மேற்குப் பிரதேச சபைத் தலைவர் ந. திரிலோகநாதன் அப்பிரதேசப் பொதுமக்களைக் கேட்டுள்ளார்.

வலிகாமம் மேற்குப் பிரதேச சபை எல்லைக்குள் அடங்கும் பொருளாதார வளங்களையும், கலாசார அம்சங்களையும், அதற்கேற்ற குறிக்கோளையும் கொண்டதாக இந்த இலச்சினையைத் தயாரித்து அனுப்புமாறு அவர் கேட்டுள்ளார்.

(இ-3)

# அச்சுவேலி சந்தைப் பகுதி; புனரமைக்கத் தீர்மானம்

அச்சுவேலி, ஜன. 12

அச்சுவேலி பஸ் நிலையம், பொதுச் சந்தைப் பகுதிகள் மறுசீரமைப்புச் செய்யப்பட்டு நவீனமயமாக்கப்படவுள்ளன.

வலி. கிழக்கு பிரதேசசபையின் தலைவர் குணசிங்கம் கலந்துகொண்ட அச்சுவேலி அபிவிருத்தி ஆலோசனைக் கூட்டத்தில் மறுசீரமைப்புத் தொடர்பான தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

பஸ்நிலையப்பகுதியில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்களை வீதி அபிவிருத்திக்கு ஏற்றமுறையில் மறுசீரமைப்பது, அச்சுவேலி பொதுச்சந்தையை நவீனசந்தையாக மறுசீரமைப்பது, அச்சுவேலிப் பகுதி வீதிகளை திருத்தி அமைப்பது போன்ற தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

அச்சுவேலி பஸ்நிலையத்துக்கு அருகில் உள்ள மண்டபத்தில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் வர்த்தகர்கள், உப அலுவலக அதிகாரிகள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

(இ-11)

## மீற்றர் இல்லாத இடங்களில்
# கட்டணம் அறவிடும் முறையை மறுபரிசீலனை செய்யக் கோரிக்கை

யாழ்பாணம், ஜன. 12

மீற்றர் இதுவரை பொருத்தப்படாத இடங்கள் அல்லது மீற்றர் பழுதடைந்த இடங்களுக்கானமின் கட்டணத்தை அறவிடும் போது மின்சார சபை நியாயமான முறையில் நடந்து கொள்ளவேண்டும்.

மேற்கண்டவாறு சமாதானத்துக்கும், நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழு பிரதிப்பாதுகாப்பு அமைச்சரும், மின்சக்தி, நீர்ப்பாசனத்துறை அமைச்சருமான ஜெனரல் அனுருத்த ரத்வத்தவிடம் கோரியுள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பு கடிதம் ஒன்றை அவருக்கு அனுப்பியுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது—

யாழ். மாவட்டத்துக்கான 24 மணிநேர மின் விநியோகம் சகல பகுதிகளுக்கும் இன்னும் கிடைக்கவில்லை. மின்விநியோகம் வழங்கப்பட்ட பகுதிகளிலும் சரியான முறையில் விநியோகம் செய்யப்படுவதும் இல்லை.

அத்துடன் மின்சார சபை அதிகாரிகள் திருத்த வேலைகள் மற்றும் புனருத்தாரண பணிகள் ஆகியவற்றை மேற்கொள்ளும் போதும் மின்விநியோகம் தடை செய்யப்படுகின்றது.

ஆகவே மின்மானிகள் நல்ல நிலையில் வேலை செய்யாத—

மின்மானிகள் பொருத்தப்படாத—நிலையில் மின்சாரத்தைப் பாவிப்பவர்களிடம் இருந்து தற்போது மின் கட்டணம் அறவிடப்படும் முறை ஏற்புடையது அல்ல. இது நியாயமான நடைமுறையும் அல்ல.

மின்மானிகள் பழுதடைந்தால் அவற்றைத் திருத்த வேண்டியதோ, புதிய மின்மானிகளைப் பொருத்த வேண்டியதோ மின்சார சபையின் பொறுப்பாகும்.

மின்மானி இல்லை என்பதற்காக மக்கள் மீது சுமையைப்போடுவது நியாயமானதா?

குடாநாட்டில் பெரும்பகுதியான மக்கள் இன்னமும் மீளக்குடியமராத நிலையிலேயே உள்ளனர்.

அவர்கள் தொலைக்காட்சிப் பெட்டியையோ, [illegible] களையோ, குளிர்சாதனப் பெட்டிகளையோ, நீர் இறைக்கும் இயந்திரங்களையோ பாவிப்பதில்லை. அவர்கள் தமது வீட்டில் இரண்டோ அல்லது மூன்றோ மின் குமிழ்களை மட்டுமே பாவிக்கிறார்கள்.

அத்துடன் அவர்கள் இருக்கும் வீடுகளும் அவர்களின் சொந்த வீடுகள் அல்ல. அவர்களின் நண்பர்கள் அல்லது வெளிநாட்டில் உள்ளவர்களின் வீடுகளே அவை.

யாழ். மாவட்டத்தில் மின்மானிகள் இல்லாது மின்சாரம் பெறுபவர்களுக்கு அவர்களின் மின்சார இணைப்புக்களின் அளவை வைத்து கட்டணம் அறவிடும் திட்டத்தை நிறுத்தி அவர்கள் பாவிக்கும் மின்சாரத்துக்கு மட்டும் கட்டணம் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்துடன் மின் மானிகளைத் திருத்த விசேட நிலையம் ஒன்று யாழ்ப்பாணத்தில் அமைக்க வேண்டும்—

இப்படி அக்கடிதத்தில் [illegible]

(இ-3)

# பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உணவு விவசாய ஸ்தாபனம் உதவி

வலி. தென்மேற்கு, ஜன. 12

யாழ் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு வாளி, பூவாளி, அரிவாள், கத்தி, மண்வெட்டி, பசளை வகைகளையும் பீற்றூட், கரட், டுபாய் பூசனி விதைகளையும் உணவு விவசாய ஸ்தாபனம் வழங்க உள்ளது.

பாதிக்கப்பட்ட மற்றும் அண்மையில் வன்னியில் இருந்து வந்து மீளக்குடியேறிய விவசாயிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் இவை வழங்கப்பட உள்ளன.

தயாரிக்கப்பட்ட பட்டியல்கள் யாவும் கிராம அலுவலரின் ஊடாக பிரதேச செயலருக்கு சமர்ப்பிக்கப்படும்.

பின்னர் அவைகள் உறுதிப்படுத்தப்பட்டு உணவு விவசாய ஸ்தாபனத்திடம் ஒப்படைக்கப்படும்.

கொடுப்பனவுகள் இம் மாத இறுதியில் வழங்கப்படவுள்ளன. (இ-185)

# செய்திக் கொத்து

## நிதி சேகரிப்பு

நாவாந்துறை, ஜன, 12

கந்தரோடை சின்னக்குளத்து அருள்மிகு வைரவர் ஆலயத் திருப்பணி வேலைகளை நிறைவேற்றுவதற்காக மேற்படி ஆலய நிர்வாக சபையினர் பல்வேறு இடங்களுக்கும் சென்று நிதி சேகரித்து வருகின்றனர். (இ-ரீ)

## கிணறுகள் புனரமைப்பு

கோப்பாய், ஜன. 12

கோப்பாய் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட குடியிருப்புப் பகுதிகளில் சேதமுற்ற கிணறுகளைப் புனரமைத்தல் மற்றும் புதிய கிணறுகளை அமைத்தல் போன்ற பணிகளில் யுனிசெவ் நிறவனம் ஈடுபட்டுள்ளது. (இ-72)

## மைதானம் விஸ்தரிப்பு

நெல்லியடி, ஜன. 12

உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரியின் விளையாட்டு மைதானத்துக்கு மேலும் 6 பரப்புக் காணி ஒதுக்கப்பட்டுள்ளது.

இக்கல்லூரியின் அதிபர் கி. நடராஜாவின் வேண்டுதலின் பேரில் இதற்கான நிதியை, கனடாவிலுள்ள பழைய மாணவர் சங்கம் அன்பளிப்பாக வழங்கியுள்ளது. (இ.109)

## நெசவு நிலையத்தை ஆரம்பிக்குமாறு வேண்டுகோள்

வளலாய், ஜன. 12

கடந்த பல வருட காலமாக இயங்காமல் இருக்கும் வளலாய் நெசவு நிலையத்தை மீள ஆரம்பித்து இயங்கச் செய்வதன் மூலம் வேலை வாய்ப்பை வழங்கி உதவுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு இப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(இ-178)

## இடமாற்றம்

பருத்தித்துறை, ஜன. 12

கோப்பாய் கல்விக் கோட்டக் கல்வி அதிகாரியாகக் கடமையாற்றிய ஆ. இராஜேந்திரம் வடமராட்சி கல்வி வலயத்துக்கு உடனடியாகச் செயற்படும்படியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (118)

## கட்டடம் புனரமைப்பு

நல்லூர் பிரதேச செயலகத்துக்குச் சொந்தமான கட்டடமொன்றின் புனரமைப்பு வேலைகள் ஆரம்பமாகி 5 லட்சம் ரூபா செலவில் தற்போது நடைபெற்று வருகின்றன.

(இ-7)

## நுளம்புத் தொல்லை

கொக்குவில், ஜன. 12

கொக்குவில், தாவடி, குளப்பிட்டி ஆகிய பகுதிகளில் நுளம்புப் பெருக்கம் அதிகரித்து வருகிறது.

(இ)

## விண்ணப்பம் கோரல்

சுதுமலை, ஜன. 12

யாழ்ப்பாணப் பகுதியில் உள்ள அஞ்சல், உப-அஞ்சல் அலுவலகங்களில் சிற்றூழியர்களுக்கான பதிலாள்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப் பதவிக்கான விண்ணப்பங்களை ஜனவரி 18 ஆம் திகதிக்கு முன்பதாக யாழ். பிரதேசஅஞ்சல் அத்தியட்சருக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

(இ-139)

## கலந்துரையாடல்

நெல்லியடி, ஜன. 12

புலோலி மேற்கு கார்த்திகேயர் வீதியிலுள்ள சிவசாயி கலாமன்ற உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் இம் மாதம் 20 ஆம் திகதி மாலை 3 மணிக்கு நடைபெறவுள்ளது. (இ-109)

## வேலணை விவசாயிகளுக்கு உதவி

வேலணை, ஜன. 12

வேலணை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட விவசாயிகளுக்கு விதை பொருள்கள், பசளை வகைகள், நீரிறைக்கும் இயந்திரங்கள், மண்வெட்டிகள், கைப்பட்டைகள் வழங்கப்பட உள்ளன.

கடற்றொழிலாளர்களுக்கு மீன்பிடி உபகரணங்கள் வழங்கப்படும்.

அண்மையில் வேலணை பிரதேச செயலகத்தில் உலக உணவு ஸ்தாபனம் நடத்திய கலந்துரையாடலின் போது ஸ்தாபன யாழ். மாவட்ட பொறுப்பதிகாரி ஹெய்லி நிடாய் இதனைத் தெரிவித்தார்.

(இ-ரீ)

## கூரை உபகரணங்கள்

கோப்பாய், உடுவில், தெல்லிப்பழை ஆகிய பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட மீளக்குடியமர்ந்தோரில் தெரிவு செய்யப்பட்டோருக்கு 10 ஆயிரம் ரூபா பெறுமதியான கூரை உபகரணங்களை அகதிகளுக்கான ஐ நா. தூதரகம் வழங்கி வருகின்றது.

(இ-72)

## நீரிறைக்கும் இயந்திரம் வழங்கப்பட்டது

சங்கானை, ஜன. 12

போருட் நிறுவனத்தின் உதவியுடன், சங்கானை ப. நோ. கூ. சங்கத்தின் மூலம் கடனடிப்படையில் 20 பயனாளிகளுக்கு நீர் இறைக்கும் இயந்திரங்கள் சென்றவருட இறுதியில் வழங்கப்பட்டுள்ளன.

(இ-29)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேர்பியர் சிறைப்பிடிக்கப்பட்டதால் கொசோவோவில் மீண்டும் நெருக்கடி

பெல்கிரேட், ஜன. 12

சேர்பியப்படையைச் சேர்ந்த 8 பேரை அல்பேனிய பிரிவினைவாதக் கிளர்ச்சியாளர்கள் சிறைப்பிடித்ததையடுத்து கொசோவோவில் ஏற்பட்ட முறுகல் நிலை தொடர்ந்தும் இறுக்கமடைந்து வருகிறது.

கொசோவோவில் தற்போது ஏற்பட்டுள்ள இந்த யுத்தப் பதற்றம் கடந்த ஒக்ரோபர் மாதம் நடைமுறைப்படுத்தப்பட்ட யுத்த நிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்துவிடலாம் என்று அவதானிகள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

சிறைப்பிடிக்கப்பட்ட சேர்பியப் படையினரை விடுவிக்கும் முயற்சிகளில் இராணுவம் பயன்படுத்தப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. இந்த இராணுவ அச்சுறுத்தல் மேலும் மேலும் வலுப்பெற்று வருகின்றது.

கடத்தப்பட்ட படையினர் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் மெற்றோவீக்காப்பகுதிக்கு ஏற்கனவே பெருமளவு சேர்பியப் படைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

ஐரோப்பிய பாதுகாப்பு ஒத்துழைப்பு அமைப்பின் கண்காணிப்பாளர்கள் 2 ஆயிரம் பேர் இங்கு கண்காணிப்புக் கடமைகளில் ஈடுபட்டு வருகிறார்கள்.

இவர்கள் பணயக் கைதிகள் விடயத்தையும், பதில் நடவடிக்கைகளையும் கண்டித்துள்ளனர்.

இரு தரப்பினரும் தங்கள் நடவடிக்கைகளை நிறுத்திக் கொள்ள வேண்டுமென்று இத்தாலி வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

சிறைப்பிடிக்கப்பட்டிருக்கும் 8 படையினரையும் தாம் சென்று பார்வையிட்டதாகவும் —

அவர்கள் நலத்துடன் இருப்பதாகவும் —

விரைவில் அவர்கள் விடுவிக்கப்படுவார்கள் என்றும் — கண்காணிப்பாளர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். (இ-8)

## நைஜீரியாவில் தேர்தல்

லாகோஸ் ஜன. 12

நைஜீரியாவின் மக்கள் சபைக்கான பூர்வாங்க தேர்தலில் பெரும் எண்ணிக்கையான மக்கள் கலந்து கொண்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இத் தேர்தல் 16 வருட இராணுவ ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவரும் என்று நம்பப்படுகிறது.

நைஜீரியாவின் 36 மாநிலங்களுக்கான ஆளுநர்களைத் தேர்ந்தெடுக்கும் தேர்தல் கடந்த சனியன்று இடம்பெற்றது.

தேசிய சபைக்கான தேர்தல் பெப்ரவரி மாதம் நடைபெறவுள்ளது. அதற்கு முன்னோடியாகவே பூர்வாங்க தேர்தல் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

பெப்ரவரி மாதம் நடைபெறவுள்ள தேர்தலில் ஜனாதிபதி ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுவார். தற்சமயம் ஆட்சியில்உள்ள ஜெனரல் அப்துல் கலாம் அபூபக்கர் அதன் பின்னர் பதவி இறங்கி விடுவார்.

தற்போது நடைபெற்ற பூர்வாங்க தேர்தல் எதுவித பிரச்சினைகளுமின்றி நடந்து முடிந்ததாகத் தேர்தல் அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

## குவைத், சவூதி மீது ஈராக் குற்றச்சாட்டு

பாக்தாத், ஜன. 12

கடந்த மாதம் ஈராக் மீது அமெரிக்க, பிரிட்டிஷ் விமானங்கள் மேற்கொண்ட தாக்குதலுக்கு சவூதி அரேபியாவும், குவைத்தும்தான் காரணம் என ஈராக்கிய நாடாளுமன்றம் அறிவித்துள்ளது.

இரு நாள்களாக நடைபெற்ற நாடாளுமன்ற சிறப்புக் கூட்டத்தொடரின் இறுதியில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் இந்த இரு நாடுகளும் அரபு உலகையே காட்டிக் கொடுத்துவிட்டன என குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. எனினும் இந்த இரு நாடுகளும் தண்டிக்கப்படவேண்டுமென்ற கோரிக்கை எழுப்பப்படவில்லை.

1991 ஆம் ஆண்டு வளைகுடாப் போருக்குப் பின்னர் ஈராக் மீது விதிக்கப்பட்ட ஐ. நா. தீர்மானங்கள் அனைத்தும் விலக்கிக் கொள்ளப்பட வேண்டுமென்றும் ஈராக்கிய நாடாளுமன்றம் கேட்டுக்கொண்டுள்ளது. (இ-8)

## பெனாஸிர் கணவருக்கு மருத்துவப் பரிசோதனை

இஸ்லாமாபாத், ஜன. 12

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் பெனாஸிர் பூட்டோவின் கணவர் சர்தாரி நீதிமன்ற ஆணையின்படி மருத்துவப் பரிசோதனைக்காக கராச்சி மருத்துவ மனைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

சிறையிலிருந்த சர்தாரி மருத்துவ மனையில் இருக்கும் வரை அங்குள்ள இரு படுக்கைகள் கொண்ட பகுதி துணைச்சிறையாக இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வேறு எவருக்கும் சர்தாரியைப் பார்க்க அனுமதி வழங்கப்படவில்லை என பாகிஸ்தான் மக்கள் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

1996 ஆம் ஆண்டு திருமதி பெனாஸிர் பூட்டோ பதவியிலிருந்து விலக்கப்பட்டதுடன் சர்தாரி ஊழல் மற்றும் கிரிமினல் குற்றச்சாட்டுக்களின் பேரில் கைது செய்யப்பட்டார் என்பது தெரிந்ததே. (இ-8)

## அந்தமான் நிக்கோபார் தீவுகளில் தூர கிழக்கு கடற்படை தலைமையகம்

புதுடில்லி, ஜன. 12

அந்தமான், நிக்கோபார் தீவுகளில் அடுத்த சில வாரங்களில் தூர கிழக்கு கடற்படைத் தலைமையகம் ஒன்று அமைக்கப்படுமென இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் அறிவித்துள்ளார்.

நாட்டின் கிழக்குப் பகுதியிலிருந்து ஏற்படும் அச்சுறுத்தலை சமாளிப்பதற்காகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தேடுதல், மீட்புப் பணிகளிலும், கடற் கொள்ளைத் தடுப்பு நடவடிக்கைகளிலும் இந்தப் படைத் தலைமை உதவி செய்யும்.

இப்படி அவர் மேலும் கூறினார்.

இதற்கிடையில் இந்தியாவுக்கும் பிரான்ஸுக்கும் இடையே இரு தரப்புப் பாதுகாப்பு ஒத்துழைப்பை அதிகரிக்கும் பொருட்டு பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் நேற்று உயர் நிலைப் பிரதிநிதிகள் குழுவுடன் பிரான்ஸ் புறப்பட்டுச் சென்றார். (இ-18)

## டயானா மரணத்தில் எவரும்குற்றவாளி இல்லை

லண்டன், ஜன. 12

வேல்ஸ் இளவரசி டயானா பாரிஸில் கார் விபத்தில் மரணமானது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் எவரும் குற்றவாளிகளாகக் காணப்படவில்லை என பிரிட்டிஷ் தொடர்பு சாதனங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

டயானாவும் அவரது காதலன் டோடி அல்பெயிட்டும் விபத்தில் கொல்லப்பட்டது தொடர்பான விவரங்களைத் திரட்டி பிரெஞ்சு நீதிபதி ஹெர்ஸ்டீபன் தலைமையில் விசாரணைகள் ஆரம்பமாகி நடைபெற்று வந்தன.

இந்த விசாரணை கடந்த வாரம் பிரெஞ்சு அதிகாரிகளால் பூர்த்தி செய்யப்பட்டது.

விசாரணை செய்த பிரெஞ்சுப் பொலீஸார் மற்றும் அதிகாரிகளின் கருத்துப்படி இளவரசி டயானாவின் மரணத்துக்கு விபத்தில் கொல்லப்பட்ட டயானாவின் கார்ச் சாரதி ஹென்றி போல் மட்டுமே காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அதே சமயம் டயானாவின் காரின் பின்னால் துரத்திச் சென்ற 2 புகைப்படக்காரர்கள் மீது எவ்வித வழக்கும் தொடரப்படமாட்டாது என ''சண்டே மிரர்'' பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விபத்து நடந்த இடத்தை முதன் முதலில் சென்றடைந்த மற்றும் சில புகைப்படப்பிடிப்பாளர்களுக்கு எதிராக ''விபத்தில் சிக்கியவர்களுக்கு உதவ மறுத்தனர்'' என்ற குற்றச்சாட்டு மட்டுமே சுமத்தப்பட்டுள்ளது.

**உலக அரங்கில்**

## காஷ்மீரில் சிவசேனைத் தலைவர் கொலை

காஷ்மீர், ஜன. 12

காஷ்மீரில் சிவசேனை இயக்கத்தின் தற்காலிகத் தலைவர் அப்துல் ரசீம் ஹனி தீவிரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

எல்லைப்புறத்திலிருக்கும் குத்வாரா மாவட்டத்தில் இச்சம்பவம் இடம்பெற்றது.

1996 இல் நடந்த சட்டப் பேரவைத் தேர்தலிலும், 1998 இல் நடந்த மக்களவைத் தேர்தலிலும் இவர் போட்டியிட்டு தோல்வி கண்டவர் ஆவார். (இ-8)

## வடகொலம்பியாவில் 80 பேர் சுட்டுக்கொலை

கொலம்பியா, ஜன. 12

வடகொலம்பியாவில் வலதுசாரித் துப்பாக்கிதாரிகளால் 80-க்கும் அதிகமானவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

அனேகமானவர்கள் தேவாலயங்களில் பிரார்த்தனையிலிருந்தபோது துப்பாக்கிதாரிகளால் வெளியே இழுத்து நிறுத்தப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டனர்

'பரா மிலிட்டரி'' எனப்படும் துணைப்படைப் பிரிவைச் சேர்ந்த ஆயுதபாணிகள் 40 பேரே இக்கொடூரச் செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-8-10)


## கண்ணீர் அஞ்சலி

எமது தமிழ் ஆசிரியை

**திருமதி வசந்தகுமாரி நின்மதிராசா (B.A)**

அவர்களின் அகால மரணச் செய்திகேட்டு ஆழ்ந்த துயருறுகின்றோம். அன்னாரின் குடும்பத்தினரின் துயரை நாமும் பகிர்ந்து கொள்கின்றோம்.

உயர்தர வகுப்பு மாணவர்கள் (கலை)
யா/ஆழியவளை சி. சி. த. க. வித்தியாலயம்
(62098)



உ
விராட் விஸ்வப் பிரம்மணே நம.

**அகில இலங்கை விஸ்வகர்மகுல சங்கம்**
யாழ்ப்பாணம்.

## தை அமாவாசையும் விசேட பொதுக்கூட்டமும்

கடந்த காலங்களில் மேற்படி சங்கம் திருக்கேதீஸ்வரத்தில் நடத்தி வந்த தை அமாவாசை தீர்த்தத் திருவிழாவை அங்கு நடக்க முடியாதுள்ளதால் 17 - 1 - 1999 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் கைதடி சைவச்சிறுவர் இல்லத்தில் நடேசப் பெருமானுக்கு அபிஷேக ஆராதனைகள் நடைபெறுவதோடு, சங்கீத பூஷணம், கலாபூஷணம், இசையரசு P சந்திரசேகரம் அவர்களின் தலைமையில் அபிராமியந்தாதி முற்றோதலும் நடைபெற்று சங்கத்தின் விசேட பொதுக்கூட்டமும் நடைபெறும்.

அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது வருகை தரும்படி அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

★ தனிப்பட்ட அழைப்பு அனுப்பமுடியாமைக்கு வருந்துகின்றோம்.

**ஸ்தபதி ஆ. ஜீவரட்ணம் ஆச்சாரி**
தலைவர்,
ஆறுமுகம் சிற்பாலயம்,
திருநெல்வேலி.

**த. பரராஜசிங்கம் J. P.**
செயலாளர்,
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

(சி/6105)


## தக்கரேயைக் கைது செய்ய இம்ரான்கான் கோரிக்கை

இஸ்லாமாபாத், ஜன. 12

வன்முறையையும், நாசவேலைகளையும் கடந்த 9 ஆண்டுகளாக ஆதரித்து வரும் சிவசேனைக் கட்சித் தலைவர் பால்தக்கரேயைக் கைது செய்ய வேண்டுமென்று பாகிஸ்தானின் முன்னாள் பிரபல கிரிக்கட் வீரர் இம்ரான்கான் கூறியிருக்கிறார்

கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர் அரசியலில் ஈடுபட்டிருக்கும் இம்ரான்கான் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் —

பால்தக்கரே சட்டத்தை மதிக்காது இருந்து வருவதுடன் சகல வழிகளிலும் அரசியல் சட்டங்களை மீறி வருகிறார் என்று குற்றஞ் சாட்டியுள்ளார்.

பாகிஸ்தான்—இந்திய அணிகளுக்கிடையிலான ரெஸ்ட் கிரிக்கெட் நடைபெற இருந்த மைதானம் சமீபத்தில் சிவசேனையினால் சேதமாக்கப்பட்டது தெரிந்ததே. (இ-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேச்சுக்கான வாய்ப்புக்கள் இன்னும் வெகு தூரத்திலேயே

**விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்கள் கைக்கெட்டிய தூரத்தில் இருப்பது போன்று தென்பட்டாலும் இன்னும் அது வெகு தூரத்திலேயே இருப்பதாக ''யுக்திய'' சிங்கள வார இதழ் தெரிவிக்கிறது. அதில் வெளியான கட்டுரையின் சில பகுதிகள் கீழே பிரசுரமாகி உள்ளன.**

சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமாகவுள்ளன எனப் பல மாதங்களாகப் பலவீனமான செய்திகள் பரவி வருகின்றன.

சமாதானப் பேச்சுக்களை மேற்கொள்ள அன்ரன் பாலசிங்கமும் மற்றுமொரு தலைவரும் விடுதலைப் புலிகளால் ஐரோப்பிய நாடு ஒன்றுக்கு அனுப்பப்பட்டுள்ளனர் எனவும் ஒரு முறை செய்திகள் வெளியாகி இருந்தன.

இவ்வாறான சூழ்நிலையில் விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையே எவ்வகையிலாவது சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமாக வாய்ப்புக்கள் உள்ளனவா என்பதைக் கண்டறிவதே கடந்த பல வாரங்களாக அரசியல் விமர்சகர்களின் பணியாக இருந்தது.

### மூன்றாம் தரப்பு உதவி அவசியம்

ஸ்ரீலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே எவ்வகையிலாவது சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதாயின் ஏதோ ஒரு வகையில் மூன்றாம் தரப்பின் ஒத்துழைப்பு அவசியம் என்பதே இந்த அரசியல் விமர்சகர்கள் பலரின் கருத்தாகும்.

1998 டிசெம்பர் மாதத்தில் ''புரொண்ட் லைன்'' சஞ்சிகைக்கு அளித்த பேட்டியில் மூன்றாம் தரப்பின் பங்களிப்பை ஜனாதிபதி நிராகரித்திருந்தார். ஆனால் சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பிப்பதற்கு ஓர் ஏற்பாட்டாளர் அவசியம் என்பதை ஜனாதிபதி ஏற்றுக் கொண்டார்.

இதன்படி ஸ்ரீலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான ஆரம்பப் பேச்சுவார்த்தைகளுக்கு மூன்றாம் தரப்பொன்றின் ஒத்துழைப்புத் தேவை என்பதை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டுள்ளார்.

அவ்வாறான ஒரு பேச்சுவார்த்தை நடைபெறுவதானால் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதற்கு இருதரப்பும் ஏற்றுக்கொள்ளும் ஓர் இடத்தைத் தெரிவு செய்வது—

பேச்சுவார்த்தைகளில் ஈடுபடவுள்ள பிரதிநிதிகள் (இரு தரப்பிலும்) மற்றும் நிகழ்ச்சி நிரல் ஆகியன தொடர்பாக இரு தரப்பினரின் உடன்பாட்டை உருவாக்குவது—

ஆகியனவே ஏற்பாட்டாளர்களின் ஆகக்கூடிய பணிகளாக இருக்கும்.

இந்த மூன்று பணிகளையும் நிறைவேற்றி முடிப்பது அவ்வளவு இலகுவான காரியம் அல்ல.

உதாரணமாகப் பேச்சுவார்த்தைகள் வெளிநாடு ஒன்றில் நடைபெறுமானால் இரு தரப்பினரினதும் பாதுகாப்பு மற்றும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளின் போக்குவரத்து வசதிகளை ஆயத்தம் செய்தல் போன்ற விடயங்கள் ஆகியன இலகுவாகச் செய்து முடிக்கக்கூடிய பணிகள் அல்ல.

விடுதலைப் புலிகளும் மூன்றாம் தரப்பின் பங்களிப்புக் குறித்துக் கவனம் செலுத்துவதால் உண்மையில் பேச்சுக்களுக்கான ஆரம்பம் குறித்து தங்களது இணக்கம் உருவாகியுள்ளது எனக் கூறலாம்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதற்கான ஆரம்பப் பேச்சுக்களை மேற்கொள்ள இந்த இணக்கப்பாடு முற்றிலும் போதுமானதாகும்.

பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வு காணலாம் என இரு தரப்பினரும் நம்பினால் எதிர்காலத்தில் ஆகக் குறைந்தது இருதரப்புப் பிரதிநிதிகளும் சந்திப்பதற்கான வாய்ப்புக்கள் தற்போது உருவாகி உள்ளன.

இதற்குக் காரணம் சமாதானத்தை உருவாக்குவதற்கான ஆரம்ப முயற்சிகளை மேற்கொள்ள பல்வேறு நாடுகளும் அமைப்புக்களும் தங்கள் விருப்பத்தை ஏற்கனவே தெரிவித்துள்ளன.

இருப்பினும் அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான சமாதானப் பேச்சுக்களுக்கான அடிப்படைகள் இல்லை என்ற கருத்து வர வர வலுப்பெற்று வருகிறது.

சிறிலங்கா அரசினரும் விடுதலைப் புலிகளும் யுத்தத்தில் நம்பிக்கை வைத்துள்ளனர் என்பதும் —

சமாதானப் பேச்சுக்கள் மூலம் தீர்வு காண்பதற்கான விருப்பத்தை அவர்கள் வெளிப்படுத்தவில்லை என்பதும் —

எனவே பேச்சுக்களுக்கான அடிப்படைகள் இல்லை என்பதும் — விமர்சகர்களின் வாதம் ஆகும்.

அரசாங்கத்துக்கும் அதன் தலைவர்களுக்கும் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வு காண்பது தொடர்பாக கருத்து ஒற்றுமை நிலவவில்லை என வீக்எண்ட் எக்ஸ்பிரஸ் பத்திரிகையின் யுத்த— அரசியல் விமர்சகரும் முன்னாள் விமானப்படைத் தளபதியுமான எயர் மார்ஷல் ஹரி குணதிலக குறிப்பிட்டுள்ளார்.

### ரத்வத்தையின் நிபந்தனைகள்

இதன் பின் சுமார் இரு வாரங்களின் பின்னர் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை குறிப்பிடுகையில் 'மூன்றாம் தரப்பினர் தலையீடு இரண்டாம் தரப் பிரச்சினை ஆகும். மூன்றாம் தரப்பினரின் தலையீடு இருப்பினும் அல்லது இல்லாவிடினும் பேச்சுவார்த்தைகளுக்கு முன்னர் ஆயுதங்களைக் கையளிக்கவேண்டும். மேலும் தீர்க்கமான ஒருகால எல்லைக்குள் பேச்சுவார்த்தைகளை முடிப்பது என்ற முன் நிபந்தனையை விடுதலைப்புலிகள் ஏற்றுக்கொள்ள வேண்டும்' என்று ரத்வத்த தெரிவித்திருந்தார்.

### கதிர்காமரின் நிலைப்பாடு

இதற்குச் சில மாதங்களின் பின்னர் வெளிநாட்டு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் இக்கருத்தையே வெளியிட்டார்.

''இனப் பிரச்சினை ஓர் உள்நாட்டுப் பிரச்சினையாகும் மூன்றாம் தரப்பினரின் பங்களிப்பானது எமது உள் விவகாரத்தில் தலையிடுவதாகும். நாங்கள் அவ்வாறானதை ஏற்றுக் கொள்ள முடியாது'' எனக் கதிர்காமர் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் பேச்சுவார்த்தைகள் தொடர்பான தந்திரங்கள் குறித்து கொழும்பு பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த அரசியல் துறை விரிவுரையாளர் ஜயதேவ உயன்கொட தெரிவிக்கையில் ''விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் பேச்சுவார்த்தைகள் தொடர்பாகத் தன்னிச்சையாக முன் நிபந்தனைகளை விதிப்பது காலம் கடத்தும் தந்திரத்தைக் கடைப்பிடிப்பதற்கே ஆகும். எவ்வாறாயினும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான அரசியல் அவகாசம் பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசுக்கு இல்ல'' என்றார்.

தாங்கள் முன் நிபந்தனைகள் எவற்றையும் விதிக்கவில்லை எனத் தெரிவித்துள்ளபோதிலும் பிரபாகரன் தனது அறிக்கையில் பேச்சுவார்த்தைகள் தொடர்பாக இரு முன் நிபந்தனைகளை விதித்துள்ளார் என்பது தெளிவு. முதலாவது நிபந்தனை பொருளாதாரம் தொடர்பானது. இரண்டாவது நிபந்தனை யுத்தம் தொடர்பானது. வடக்கு - கிழக்கில் மக்களின் பொருளாதார நிலையை வழமைக்குக் கொண்டு வருதல் — முதலாவது முன் நிபந்தனை ஆகும். அதாவது பொருளாதாரத் தடைகளை நீக்குவதாகும். இரண்டாவது முன் நிபந்தனை சுதந்திரமான — இயல்பான நிலையை ஏற்படுத்துவதாகும்.

**தமிழில்: கஜனி**

அதாவது குறிப்பாக யாழ்ப்பாணத்திலிருந்து அரச படைகளை வாபஸ் பெறுவதாகும். மேலும் விடுதலைப் புலிப் போராளிகளின் சுதந்திரமான நடமாட்டத்துக்கு அனுமதி வழங்குவதாகும் என்றும் உயன்கொட தெரிவித்தார்.

### அரசாங்கத்தின் அரசியல் நிலைப்பாடு

1994 — 95 இல் இடம்பெற்ற சமாதானப் பேச்சுக்களின் அனுபவங்களை எடுத்துக் கூறும் ஜயதேவ உயன்கொட இந்த இரு முன் நிபந்தனைகளையும் நிறைவேற்றுவது மிகவும் கடினமானது என்கிறார்.

இவ்வாறான சூழ்நிலையில் விடுதலைப் புலிகளின் தந்திரங்களுக்குத் தாக்குப்பிடிக்கக் கூடிய அரசியல் வழிமுறைகள் அரசிடமில்லை எனவும் ஜயதேவ உயன்கொட தெரிவிக்கிறார்.

ஒரு புறத்தில் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வினைக் காணக் கூடிய உரிய வழிவகைகள் அரசிடமில்லை. மறு புறத்தில் விடுதலைப் புலிகளின் பேச்சுக்கான அறிவிப்பானது முற்றிலுமாக யுத்த ரீதியான தந்திரங்களுக்கு உட்பட்ட ஒழுங்கு மாத்திரமே என்பது தெளிவாகிறது என உயன்கொட தெரிவித்துள்ளார்.

இரு தரப்பினரும் விதிக்கும் முன் நிபந்தனைகளை மறு தரப்பினர் ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளது. ஒரே ஒரு நிபந்தனை மாத்திரமே இரு தரப்பாலும் ஏற்றுக் கொள்ளக் கூடியது. அதாவது மூன்றாம் தரப்பினரின் ஒத்துழைப்பாகும். அதுவும் ஓரளவு மாத்திரமே.

எவ்வாறாயினும் பேச்சுக்கள் மூலம் தீர்வு காண எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படுமாயின் அது வெளியாரின் முயற்சியாலும் ஒத்துழைப்பாலும் மாத்திரமே நடைபெறும் என்பது தற்போது தெளிவாகியுள்ளது.

அவ்வாறான முயற்சி வெற்றி பெறுமளவுக்கு உகந்த அரசியல் சூழ்நிலை தற்போது இல்லை என்றே தோன்றுகிறது. ★

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 03 — 11 — 1960



திர்வு 12 — 01 — 1998

**சின்னத்தம்பி யோசப் (சிவச்சந்திரன்)**

மட்டுவில் — கைதடி

ஆறுதல் வார்த்தைகள் கூறப்பலருண்டு. ஆனாலும் அன்பு காட்டும் உங்கள் நினைவு என்றும் எம்மை விட்டு அகலாது!

உங்கள் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்கும்:

அன்பு மனைவி
**திருமதி யோசப் றெபெக்கா.**
(ஞானரஞ்சிதம்)

பிள்ளைகள்
**அகல்யா, லோறன்ஸ்.**

கைதடி மேற்கு,
கைதடி.

(சி/6080)

## கோழித்திருட்டு அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 12

மானிப்பாய்ப் பகுதியில் கோழித் திருட்டு அதிகரித்துள்ளது என அப்பகுதி மக்களால் தெரிவிக்கப்படுகிறது.

மானிப்பாய் சந்தை ஒழுங்கைப் பகுதியில் ஒருவரின் வீட்டில் இருந்து கடந்த சனியன்று கோழிகள் திருடப்பட்டுள்ளன.

இத்துடன் இவரது வீட்டில் மூன்றாவது தடவையாகக் கோழித்திருட்டு நடைபெற்றுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-15)

## பாலர் பாடசாலை

யாழ்ப்பாணம், ஜன, 12

ஊரெழு ஸ்ரீ சத்ய சாயி மண்டலியினர் இலவச பாலர் பாடசாலை ஒன்றினை புன்னாலைக் கட்டுவனில் ஆரம்பித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-?)

## சைவப்புலவர் பரீட்சை ஏப்ரலில் நடைபெறும்

யாழ்ப்பாணம் ஜன. 12

யாழ். சைவபரிபாலன சபை மற்றும் அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தினால் எதிர்வரும் ஏப்பிரல் மாதம் நடத்தப்படவிருக்கும் சைவப்புலவர் மற்றும் சித்தாந்த பண்டிதர் பரீட்சைகளுக்கு 150 பேர் தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ளனர்.

யாழ். சைவபரிபாலன சபையினரால் நடத்தப்படும் சித்தாந்த பிரவேச பண்டிதர் பரீட்சைக்கு 40 பேரும், சித்தாந்த பாலபண்டிதர் பரீட்சைக்கு 15 பேரும், சித்தாந்த பண்டிதர் பரீட்சைக்கு 13 பேரும் விண்ணப்பித்துள்ளனர்.

அகில இலங்கைச் சைவப் புலவர் பட்டதாரிகள் சங்கத்தினால் நடத்தப்படவிருக்கும் இளஞ் சைவப் புலவர் பரீட்சைக்கு 57 பேரும்சைவப் புலவர் பரீட்சைக்கு 25பேரும் இவ்வாறு தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ளனர்.

சைவப் புலவர் பரீட்சைகள் ஏப்பிரல் மாதம் 30ஆம் திகதி முதல் ஆரம்பமாகித் தொடர்ந்து இடம்பெறும் என கௌரவ பரீட்சைக் காரியதரிசி சைவப் புலவர் வ. கந்தசாமி தெரிவித்துள்ளார். (இ-7)

## இடர்காலக் கொடுப்பனவு இன்னும் இல்லை

சாவகச்சேரியில இயங்கும் மயிலிட்டி மார்பு நோய் வைத்தியசாலையில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு 1990 ஆம் ஆண்டு ஜூன் மாதம் தொடக்கம் 1998 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரையிலான காலப்பகுதிக்கு இடர் காலக் கொடுப்பனவுகள் இது வரை வழங்கப்படவில்லை என புகார் கூறப்படுகிறது.

இந்த ஊழியர்களுக்கான கொடுப்பனவுகள் அனைத்தும் கொழும்பிலிருந்து அனுப்பப்படுகின்றபோதிலும் இடர் காலக் கொடுப்பனவுகள் இது வரை வழங்கப்படாதது குறித்து ஊழியர்கள் கவலை தெரிவித்தனர். (இ-117)

## புகையிலைச் செய்கை பாதிப்பு

வேலணை, ஜன. 12

ஒருவாரகாலமாக வேலணைப்பகுதியில் பெய்த கடும் மழையினால் புகையிலைச் செய்கை பாதிப்படைந்துள்ளது. (இ-ரி)

## வீடு திருத்த நஷ்டஈடு

நெடுந்தீவில் வன்செயல்களினால் பாதிக்கப்பட்ட வீடுகளைத்திருத்தியமைக்கவென அந்த வீட்டுச் சொந்தக்காரர்களுக்கு நஷ்டஈடு வழங்கப்படவுள்ளது.

நூற்றிப் பதின்மூன்று பேருக்கு நஷ்டஈடு வழங்கப்படவிருப்பதாக நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் நா. இராமச்சந்திரன் தெரிவித்தார்.

வீடுகள் புனரமைப்புக்கென முதல் கட்டமாகரூபா ஐயாயிரமும் எஞ்சிய தொகை கட்டம் கட்டமாக வேலைகள் பூர்த்தியடைவதையடுத்து வழங்கப்படும் எனவும் நஷ்டஈடாக ஒருவருக்கு ரூபா 25 ஆயிரம் வரை வழங்கப்படும் எனவும் தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



திருமதி
**தங்கமுத்து கனகராயர்**

பிறப்பு 11 - 11 - 1914 இறப்பு 29 - 11 - 1998

எமது பாசமிகு தாயாரின் சிவபதமடைந்த செய்தி கேட்டு உடன்வந்து ஆறுதல் கூறியும் பலவழிகளில் உதவி புரிந்தும் எம்மை கலங்க விடாது காத்து நின்று மயானம் வரை வந்து இறுதி அஞ்சலி செலுத்திய உறவினர்கள், நண்பர்களுக்கு எமது சிரந்தாழ்த்திய நன்றியைத் தெரிவிப்பதுடன், வீட்டிற்கு வந்து உடல் நலனைக் கவனித்து வந்த வைத்தியர்களுக்கும், நேரில் வந்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், கடிதம் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் கீரிமலையிலும் வீட்டிலும் அந்தியேட்டிக் கிரியைகளையும் வீட்டுக் கிருத்திய கிரியைகளையும் நடத்திவைத்த அந்தண சிவாச்சாரியார்களுக்கும் மதிய போசனத்தில் கலந்து சிறப்பித்த அனைவருக்கும் கரங்கூப்பி எமதுபணிவான நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

''எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு''

மக்கள்: திருமதி த. சிவஞானம்,
திரு. க. பாலசுப்பிரமணியம்,
திரு. க. சிவபாலன்,
திருமதி பு. பாலசுப்பிரமணியம்,
மருமக்கள்: திருமதி பா. செல்வராணி,
திரு. ச. பாலசுப்பிரமணியம்,
பேரர்கள்: பா. பிருந்தாபன்,
பா. பார்த்தீபன்,
பா. வைகுந்தன்,
சி. செந்தூரன்.

''பாலாவி'',
உரும்பிராய் வீதி,
மருதனார் மடம்.

அம்பனை,
பன்னாலை,
தெல்லிப்பழை.

(62073)


# இனப் பிரச்சினைக்கு யுத்தம் மூலம் ஒரு போதும் தீர்வு காண முடியாது

## ஜனாதிபதி கூறுகிறார்

கொழும்பு, ஜன. 12

அதிகாரப் பரவலாக்கல் திட்டம் அமுலுக்கு வந்த பின்னர் தமிழ் மக்கள் பிரபாகரனை முற்றாகப் புறக்கணித்து விடுவார்கள். இனப் பிரச்சினைக்கு யுத்தம் மூலம் தீர்வு காண முடியாது

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தெரியாவ தேர்தல் தொகுதியைச் சேர்ந்த மகிழ்நுவர என்ற இடத்தில் நேற்று முன் தினம் பிற்பகல் இடம் பெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் பேசுகையிலேயே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:—

போருக்கு இராணுவ நடவடிக்கை மூலம் தீர்வு காண முடியும். ஆனால் இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காண முடியாது.

இனப்பிரச்சினைக்குத்தீர்வு காண்பதற்காகவே அரசாங்கம் அதிகாரப் பரவலாக்கல் திட்டத்தை உள்ளடக்கிய அரசமைப்பு திருத்தப் பிரேரணையை முன்வைத்திருக்கின்றது.

வடக்கு—கிழக்கில் வாழும் மக்களில் 80 சதவீதத்திற்கும் மேற்பட்டவர்கள் இந்த அரசியல் யோசனைகளுக்கு உடன்பாடு தெரிவித்துள்ளனர்.

தற்போதைய அரசாங்கம் பொதுத்தேர்தலையும். ஏனைய தேர்தல்களையும் உரிய வேளையில் நடத்தும்—முன்னைய அரசாங்கத்தைப் போல குறுக்கு வழிகளில் பதவிக்காலத்தை நீடிக்கும் நோக்கம் எனக்குக் கிடையாது.

அரசாங்கம் ஒவ்வோர் வருடமும் வரவு — செலவுத்திட்டத்தின் மூலம் வடமேல் மாகாணசபைக்கு நிதியை ஒதுக்கீடு செய்து வந்திருக்கின்றது. ஆனால் இந்த நிதிக்கு என்ன நடந்தது என்பது புதிராகவே இருக்கிறது.

வடமேல் மாகாணத்தில் போதிய அபிவிருத்தி வேலைகள் நடந்ததாகத் தெரியவில்லை இது தொடர்பாக ஆராயப்பட்டு உரியவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

ஜே. வி. பி கிளர்ச்சிக் காலப் பகுதியில் வடமேல் மாகாணத்தில் காணாமற் போன சுமார் 3 ஆயிரம் இளைஞர்களில் 2 ஆயிரம் இளைஞர்கள் பற்றிய விவரங்கள் ஏற்கனவே பெறப்பட்டுள்ளன.

இவர்களின் மறைவுக்குக் காரணமானவர்கள் சட்டத்தின் முன்னிலையில் கொண்டு வரப்பட்டுத் தண்டிக்கப் படுவார்கள்.

இப்படி ஜனாதிபதி தெரிவித்தார்.

(இ-7)

## மிதி வெடியில் மாணவன் காயம்

யாழ்ப்பாணம், ஜன. 12

மானிப்பாயில் பாடசாலை விளையாட்டு மைதானம் ஒன்றில் இடம் பெற்ற மிதி வெடிச் சம்பவத்தில் 10 வயதுச் சிறுவன் ஒருவர் காயமடைந்தார்.

விளையாட்டு மைதானத்தைத் துப்புரவு செய்யும் பணியை மேற்கொண்ட வேளை கல்லின் கீழ் இருந்து மிதிவெடிவெடித்ததாக தெரிவிக்கப்பட்டது. (இ-15)

# வாசகர் திருமுகம்

## நிர்வாகப் போட்டியால் மக்கள் பாதிப்பு

வலி. வடக்குப் பிரதேச செயலக எல்லைக்குள் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு அளவெட்டி, மல்லாகம் பலநோ. கூ. சங்கம் இதுவரை காலமும் அவர்களது உணவுத்தேவையைப் பூர்த்தி செய்து வந்துள்ளது. தற்பொழுது சங்கத்தின் தலைமைப்பதவிக்கு ஏற்பட்ட போட்டி, பூசல்களால் நிர்வாகம் ஸ்தம்பிதம் அடைந்துள்ளது. எமது நாளாந்த உணவுப் பொருள்கள் (அரிசி, மா, சீனி) அங்கு வாங்க முடியாமல் உள்ளது.

இதனால் நாம் பல கஷ்டங்களை எதிர்நோக்கியுள்ளோம். அண்மையில் பங்கீட்டு அட்டைக்கு வழங்கப்பட்ட 30 ரூபாவுக்குரிய 4 கிலோ சீனியை வாங்க முடியாது கூடிய விலை கொடுத்து தனியார் கடையில் வாங்கினோம். நாம் பசி பட்டினியால் வாடும் போது நிர்வாகத்தில் உள்ளவர்கள் எதுவித சிரத்தையும் காட்டாது, இரண்டு பிரிவுகளாகப் போட்டி போடுகின்றனர்.

பல சிரமங்களின் மத்தியிலும், வசதியீனங்களின் மத்தியிலும் நாம் மீளக் குடியமர்ந்து இருக்கின்ற வேளையில் உணவு முத்திரையில் இடம்பெற்ற ஊழல்களினால் உரிய நிவாரணப் பொருள்களை உரிய நேரத்தில் பெற முடியாமல் சிரமங்களையும் கஷ்டங்களையும் அனுபவித்தோம். தற்பொழுது மீளக் குடியமர்ந்த மக்களுக்கு வழங்கப்பட்ட 5000 ரூபா கூடப் பெற முடியாமல் தத்தளிக்கின்றோம்.

இந் நிலையில் கூட்டுறவுச் சங்கத்தோடு தொடர்புடைய அரச அதிகாரிகள் தகுந்த நடவடிக்கை எடுத்து நிர்வாகச் சீர்கேட்டை அகற்ற தைப்பொங்கலை நாம் சந்தோஷமாகக் கொண்டாட உரிய நடவடிக்கைகள் எடுத்து மகிழ்ச்சி ஏற்படச் செய்வார்களா?

க. சுந்தரமூர்த்தி.

மல்லாகம்.

## சிற்றுண்டிச்சாலையின் திருப்தியான சேவை

யாழ். போதனா வைத்தியசாலை சிற்றுண்டிச் சாலையின் கடந்த சில மாத சேவையுடன் ஆஸ்பத்திரியில் தங்கும் நோயாளர்களோடு தங்குவோரும் நோயாளரும் பெரிதும் திருப்தியடைகின்றார்கள்.

கடந்த காலங்களில் நிலவி வந்த யானை விலை குதிரை விலைக்குப் பொருள்கள் வாங்கிய நிலைமாறி இப்போது நிதான விலைக்குப் பொருள்களை வாங்கக் கூடியதாக இருக்கின்றது. வைத்தியசாலையில் நோயின் கொடுமையோடு கஷ்டப்பட்டிருக்கும் நோயாளர்களுக்கு கடந்த காலங்களில் நிலவி வந்த யானை விலை குதிரைவிலை வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போலவே அமைந்திருந்தது.

மிகத்தட்டுப்பாடான வேளையில் 'சீனி போன்ற பொருள்களைத் தாராளமாக வாங்கக்கூடிய நிலையில் திருப்தியடைகின்றோம். இதுவரை சுடுதண்ணீருக்கு 2ரூபா கொடுத்து வாங்கிய நிலைமாறி இப்போது 1 ரூபாவுக்கே சுடுதண்ணீர் வாங்கக் கூடியதாகவிருக்கின்றது, மேலும் பால்தேநீர் யாழ். மாவட்டத்தில் எங்குமில்லாத குறைந்த விலை 3 ரூபா 50 சதத்துக்கு இந்தச் சிற்றுண்டிச்சாலையில் மட்டுமே வாங்கக் கூடியதாகவிருக்கின்றது. இன்றும் பால்மா, பிஸ்கட், பணிஸ் போன்றனவும் மற்றும் பொருள்களும் வெளிக்கடை விலையிலும் பார்க்கக் குறைந்த விலைக்கே வாங்கக் கூடியதாகவிருக்கின்றது.

சேவை மனப்பான்மையோடு கூட்டுறவுத்துறையில் இயங்கும் இச்சிற்றுண்டிச்சாலை ஊழியர்களின் பண்பான உபசரிப்பைப் பாராட்ட வேண்டியுள்ளது.

இவ்வாறு திருப்தியான சேவையாற்றும் சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பணி பாராட்டுக்குரியது. அது தொடர வேண்டும்.

த. ப. சிங்கம்.
(நோயாளியுடன் தங்கிய உறவினர்)
நீர்வேலி.


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**வயிரமுத்து சுப்பையா**
தோற்றம் 10—10—1920
மறைவு 23—12—1997



திருமதி
**சுப்பையா பொன்னம்மா**
தோற்றம் 13—06—1930
மறைவு 29—04—1997

எங்களை வாழவைத்த தெய்வங்களே ஆண்டு ஒன்று
மறைந்தாலும் மாறாது எமது அன்பு
அன்பாய் பண்பாய் ஆதரவாய் எம்மை வளர்த்தீர்கள்
கலங்குது எமது கண்களெல்லாம் குளமாய்!
அம்மாவே ஐயாவே உங்கள் அழகுத் திருமுகங்களை
ஒருநாளும் நாம் மறவோம்!
தாங்காத உள்ளமுடன் தவிக்கின்ற மனதுடன்
துடிக்கின்ற நெஞ்சுடன் அனாதைகளாய் வாடுகின்றோம்.

பிள்ளைகள்

தட்டாங்கலட்டி,
கைதடி தெற்கு, கைதடி.

(சி/6093)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## நன் முயற்சி

பசுக்களை இறைச்சிக்காக வெட்டுவதை, வலிகாமம் கிழக்குப் பிரதேச சபை, முற்றாகத் தடை செய்துள்ளது. பிரதேச சபை இதற்கான தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி அதனை நடைமுறைப்படுத்தவும் நடவடிக்கை எடுத்துள்ளது. பசுக்களை இறைச்சிக்கு வெட்டுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் இந்த நடவடிக்கை வரவேற்கத் தக்கதாகும். ஏனைய உள்ளூராட்சி சபைகளுக்கு இது முன்னோடியாகவும் முன்னுதாரணமாகவும் அமைகிறது.

பசு வதையை இரண்டு காரணங்களுக்காகத் தடை செய்ய வேண்டிய தேவை உண்டு.

சைவ மக்களைப் பொறுத்த வரையில் பசு தெய்வீகப் பிராணியாகக் கருதப்படுகிறது. சிவனின் வாகனம் அது சைவ சமயத்தில் உயிர்களைக்கொல்வது பாவமாகும்; அது தடை செய்யப்பட்டுள்ளது அவ்வாறிருக்க தெய்வீகப் பிராணியான பசுவைக் கொல்வது மிகப் பெரும் பாவம்.

பசுவைக் கோமாதா என்று கொண்டாடும் வழக்கம் உண்டு. எமக்குப் பால் வளம் தருவது பசு. அதனைப் பெருஞ்செல்வமாக, லக்ஷ்மியாகக் கருதியே வளர்க்கின்றோம் குடாநாட்டின் பொருளாதாரத்தில் பசு வளர்த்தலும் ஓர் அங்கமாகும்.

வீட்டுக்கொரு பசு வளர்த்து எமது முன்னோர்கள் தமது பொருளாதாரத்தைப் பெருக்கினார்கள். பல வீடுகளில் பசு வளர்ப்பே அந்தக் குடும்பங்களின் பிரதான ஜீவனோபாயமாகவும் இருந்தது. இப்போதும் அந்த நிலை நீடிக்கிறது பசு வளர்ப்பு வருமானம் தரும் ஒரு வீட்டுக் கைத்தொழில்.

1995 இடம்பெயர்வின் போது மக்களில் பெரும்பாலானோர் தமது கால் நடைகளை விட்டுச் சென்றனர். அதனால் கால் நடைகளின் எண்ணிக்கை பெரிதும் குறைந்துள்ளது அவ்வாறிருக்கும் போது, பால் வளம் பெருக்கும் பசுக்களைக் கொல்வது — இறைச்சிக்காக வெட்டுவது — குடாநாட்டின் பொருளாதாரத்தை மேலும் பாதிக்கும்.

பசு வதையைப் பரந்த அளவில், சட்ட ரீதியாகத் தடை செய்யாவிடில் பால் வளம் குன்றிவிடும். அது மக்களின் தேகாரோக்கியத்தைக் கெடுத்து அவர்களை நோயாளிகளாக்கும். இது சமூக ரீதியான பாதிப்புக்களைத் தரும்.

ஆகையால்; உள்ளூராட்சி சபைகள் பசுவதையைத் தடை செய்து மக்களின் பொருளாதார, சுகாதாரப் பாதிப்புக்களைத் தடுக்க வேண்டும்; தவிர்க்க வேண்டும். வெள்ளம் வரு முன்னர் அணை கட்டுவதே நல்லது மேலும் பசுவளர்ப்புக்கு ஊக்கமளிக்கும் திட்டங்களையும் வகுத்துச் செயற்படுத்துவது அவசியம்.

பசுவதை சமய, பொருளாதாரச் சிறப்புகளைப் பேணுவதற்குப் பெரிதும் உதவும். உள்ளூராட்சி சபைகள் இது விடயத்தில் கண்டிப்பாக இருந்து செயற்பட்டால், ஒரு கல்லில் இரண்டு மாங்காய்களை வீழ்த்தி, மக்கள் நலனுக்கு உழைத்ததாக ஆகும்.

# சிவத்தமிழ்ச் செல்வியின் பிறந்த நாளடங்கிய சேவை வாரம் கொண்டாடப்பட வேண்டும்

## பிறந்தநாள் அறநிதிய விழாவில் மருத்துவபீடாதிபதி

வலிகாமம் தெற்கு, ஜன. 12

'பிறந்த நாள் அறக்கொடை நிதிய விழாவை அங்கொன்றும் இங்கொன்றுமாகக் கொண்டாடாமல் பிறந்த நாள் அடங்கிய வாரத்தை ஒரு சேவை வாரமாக யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்களும், வெளியில் உள்ள யாழ்ப்பாண மக்களும் கொண்டாட வேண்டும்.

சேவைவாரம்கொண்டாடும் திட்டம் நிறைவேறுவதற்கு கல்வி நிறுவனங்கள், ஆலயங்கள், மன்றங்கள், சங்கங்கள், செய்தி நிறுவனங்கள் என்று பல தரப்பினரும் பங்களிப்புச் செய்ய வேண்டும். அவ்வாரத்தில் எல்லோரும் வெவ்வேறு துறைகளில் தம்மைச் சேவையில் ஈடுபடுத்த வேண்டும் —

சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் 74ஆவது பிறந்த நாள் அறநிதிய விழா, மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியில் இந்த மாதம் 7 ஆம் திகதி நடைபெற்ற போது அறக்கொடையை கையேற்று உரையாற்றிய யாழ். பல்கலைக்கழக மருத்துவத்துறை பீடாதிபதி வைத்திய கலாநிதி இராஜேந்திரப்பிரசாத் மேற்கண்டவாறு கூறினார்.

கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் வரவேற்புரையை ஆறு. திருமுருகன் நிகழ்த்தினார்.

பிரம்மஸ்ரீ சுந்தரேஸ்வரக் குருக்கள், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமி ஆசியுரை வழங்கினர்.

மருத்துவ பீடாதிபதி இராஜேந்திரப் பிரசாத் தமது உரையில் கூறியதாவது:

எமது மருத்துவ பீடத்தில் மாணவர்களுக்கு 35 பரிசில்கள் உண்டு. ஆனால் அவை அனைத்தும் திறமை அடிப்படைக்கே உண்டு. இன்று வழங்கப்படும் அறநிதிக் கொடை, வறுமையில் திறமையைக் காணவேண்டும் என்ற எண்ணத்துடன் வழங்கப்படுகிறது.

ஆகவே அதன் வட்டி வறுமையில் திறமையுள்ள மாணவர் இருவருக்கு பகிர்ந்து கொடுக்க உள்ளோம். அடுத்த வருடத்தில் இருந்து மாணவருக்கு இது ஓர் உந்து சக்தியாகக் கிடைக்கும்.

மருத்துவ பீடத்தை இயங்கச் செய்வதில் பலபிரச்சினைகள், போதாமைகள் இருக்கின்றன. அங்கே அம்மாவின் பெயரில் இந்த நிதி நுழைவது வரவேற்கத்தக்கது.

மருத்துவ பீடத்தில் இன்று 582 பேர் கற்கின்றனர். இதில் மூன்றில் இரண்டு பங்கினர் கஷ்டப்படும் குடும்பத்துப் பிள்ளைகள். இந்நிதி அவர்களின் படிப்பிற்கு ஓர் உந்து சக்தியாக அமையும்.

கால சூழ்நிலையால் 6 வருடத்தில் கற்க வேண்டியவற்றை மருத்துவ மாணவர்கள் 8 ஆண்டுகளாக கற்க வேண்டி உள்ளது. இவர்களுக்கு பல்கலைக்கழக மானியத்தினூடாக சிறு உதவி மட்டுமே கிடைக்கிறது. 6 ஆண்டுகளின் பின் அரச உதவிகள் கிடைப்பதில்லை. இதனால் மருத்துவ மாணவர்கள் பல்கலைக்கழக இறுதி ஆண்டு வரை கற்பதற்கு



கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி. 1999 ஆம் ஆண்டுக்கான தமது பிறந்த நாள் அறக்கொடையை யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடாதிபதி வைத்திய கலாநிதி இ. இராஜேந்திரப் பிரசாத்திடம் அன்பளிப்புச் செய்கிறார் (அ)

பெரும் கஷ்டத்தை எதிர் நோக்கி உள்ளனர்.

யாழ் பல்கலைக்கழகம் எமது அரிய ஒரு சொத்து. அதனைப் பேணுவது எமது கடமை மட்டுமல்ல எமது உரிமையும் கூட— என்றார்.

துணைவேந்தர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தமது வாழ்த்துரையில்—

சேர் பொன். இராமநாதன் அமைத்த பரமேஸ்வராக் கல்லூரி பல்கலைக்கழகமாகி விட்டது. இராமநாதன் கல்லூரியின் அரைப் பங்கு பல்கலைக்கழக நுண்கலைப் பகுதியாகி விட்டது. நல் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட இத்தாபனங்கள் வளர்ச்சி பெற்று விட்டன.

எமது கல்விப் பாரம்பரியத்தை முன்னெடுக்க, இங்குள்ளவரும், வெளிநாடுகளில் உள்ளவர்களும் ஒத்துழைப்புத்தர வேண்டும். அந்த வகையில் கலாநிதி தங்கம்மா அப்பாகுட்டியின் பணிகள் எங்கள் சமூகத்துக்கு நற்பயன்களைத் தரும். அவரது வழியில் ஏனையோரும் சமூக நலன் கருதிச் செயற்பட வேண்டும்— என்றார்.

வலிகாமம் வலய பிரிவு இரண்டின் உதவிக் கல்விப் பணிப்பாளர் அ. தற்பரானந்தன் தமது வாழ்த்துரையில் கூறியதாவது:

சமய மறுமலர்ச்சிக்கும், தமிழ் வளர்ச்சிக்கும், சமூகப் பணிக்குமென ஆறுமுகநாவலரை அடியொற்றி பணியாற்றி வருபவர் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி. பணத்துக்காகப் பேரம் பேசி தொண்டாற்றுபவர் மத்தியில் இவரைப்போன்ற உத்தமர்கள் வாழ்வது எமது பாக்கியமே.

பாடசாலைகளுக்குரிய தளபாடங்கள், உபகரணங்கள் நூல்கள் வழங்கி கல்விப்பணியாற்றுவதுடன், துர்க்காபுர மகளிர் இல்லத்தில் 60-க்கு மேற்பட்ட பிள்ளைகளுக்குத் தாயாகவும், தந்தையாகவும் விளங்கி கல்வி. உணவு வசதிகள் அளித்து வளர்த்து வருகிறார். அம்மாவைப் பின்பற்றி சமூகப்பணிகள் ஆற்றுவதற்கு பெரிய நிறுவனங்கள் முன்வர வேண்டும்— என்றார்.

### கிறிஸ்தவ, இஸ்லாமிய சமயங்கள் பதிந்தவை

கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி தமது தலைமை உரையில் தெரிவித்ததாவது:

எமது துர்க்காபுர இல்லத்தினரின் பணிகளைப் பிரசுரங்கள் மூலம் அறிந்து கொண்ட வெளிநாட்டு வாசிகள் பலர் எமக்கு நிதிஉதவி வழங்கி வருகின்றனர்.

எமது மகளிர் இல்லத்துக்கென சுவிஸ் நாட்டு யாழ்ப்பாணத்து இளைஞர்கள் ஐந்து இலட்சம் ரூபா அனுப்பி உள்ளனர். நோர்வே, கனடா மற்றும் ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த பல அன்பர்கள் நிதி உதவி செய்கிறார்கள். அவர்களின் நிதி உதவியைப் பெற்று அதன் வட்டியில் இவ்வாறான பணிகளை நாம் மேற்கொண்டு வருகிறோம். துர்க்கை அம்மன் கோயிலால் வருமானம் கிடைத்தாலும் வெளிநாட்டு உதவிகளே எமக்கு அதிகம்.

வரும் பணத்துக்கு நல்ல படி கணக்கு வைக்கிறோம். கணக்குகள் பரிசோதனை செய்யப்படுகின்றன. தர்ம காரியங்களுக்கு செலவிடுகிறோம்.

அதனைக்கொண்டு 1966 முதல் ஏழைகள், பக்தர்கள், ஊனமுற்றவர் போன்றோருக்கு உதவி வருகிறோம். இப்பணியைச்செய்யவேண்டுமென்ற உணர்வை எனக்கு கிறிஸ்தவ மதத்தினரின் தொண்டுகளே ஏற்படுத்தின. கிறிஸ்தவ, இஸ்லாமிய மத மக்களுடன் 12வருடங்களுக்கு மேலாக உடனிருந்து வாழ முடிந்த காலத்தில் அவர்களிடமிருந்த நல்ல பண்புகளையும், பழக்கங்களையும் மனதில் ஆழமாகப் பதித்துக்கொண்டேன். எனது கஷ்டமான குடும்ப சூழ்நிலையிலும் என்னைத் தொண்டு செய்யத் தூண்டியது. என்னை இச் சேவைக்குப் பண்படுத்தியது.

''சமுதாயம் எனக்கு என்ன செய்தது என்று கேட்பதை விட சமுதாயத்துக்கு நான் என்ன செய்தேன் என நினை''— என்ற வார்த்தைகள் கிறிஸ்துவ, இஸ்லாமிய மார்க்கங்களில் இருந்து நான் கற்ற பாடமாகும். சைவ சமயத்தில் உள்ள பல குறைபாடுகள் அகற்றப்பட வேண்டும். மக்கள் எல்லோரும் நன்றாக வாழவேண்டும். பெரியவர்களைப் பின்பற்றி நாம் வாழ வேண்டும் —என்றார்.

உதவிக்கல்விப் பணிப்பாளர் ஆ. கமலநாதன். இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி ஆ. சிவஞானசுந்தரம ஆகியோரும் பாராட்டுரை வழங்கினர்.

துர்க்காபுர மகளிர் இல்ல மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

அறநிதிய விழாவில் சமய, சமூக, கல்வித் துறைகளைச் சேர்ந்த பிரமுகர்கள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

(அ-152)

## விளையாட்டு முகாமையாளர்

வரணி, ஜன. 12

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் விளையாட்டு முகாமையாளராக செ. திருமாறன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த கல்லூரின் இந்த வருடத்துக்கான துடுப்பாட்ட பயிற்சிகள் கடந்த ஞாயிறன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவத் தலைவரும், கிரிக்கெட் வீரருமான மா. நடராஜசுந்தரம் வீரர்களுக்கு கருத்துக்களை வழங்கி பயிற்சினை ஆரம்பித்து வைத்தார்.

(இ-171)

## நாளை

மார்கழி 29

புதன்கிழமை

திதி: ஏகாதசி

பிற்பகல்: 5.30 வரை

நட்சத்திரம்: அனுஷம்

பின்னிரவு 4 45 வரை.

ஏகாதசி விரதம்

சுபநேரம்: 5 03 -6 33

ராகுகாலம்: 12 31-2 03

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரம்)

### உதயவாக்கு

உண்மை மிகவும் பாரமாக இருக்கிறது. ஆதலால் அதை எடுத்துச் செல்ல ஒருவரும் முன் வருவதில்லை.

— புலஸ்தீனஸ் பொன்மொழி

## வலிகாமம் மேற்கில் போரூட்வீடமைப்புதிட்டம்

மூளாய் ஜன 12

வலிகாமம் மேற்குப் பகுதியில் உள்ள பின்தங்கிய கிராமங்களில் வீடமைப்புத் திட்டம் ஒன்றை 'போரூட்' நிறுவனம் மேற்கொண்டு வருகிறது

பல்லசுட்டி, திக்கரை, பெரியபுலோ, அராலி கிழக்கு ஆகிய கிராமங்களில் நலிவுற்ற நிலையில் மீளக்குடியமர்ந்துள்ள குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு, மேற்படி திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது.

இப்பகுதி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் வகையில் மேலும் பல நடவடிக்கைகளில் மேற்படி நிறுவனம் ஈடுபட்டு வருகின்றது.

கடந்த ஆண்டைப் போல் இந்த ஆண்டிலும் இவ்வாறான திட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (இ-99)

## 'கெயர்'உதவி

மூளாய், ஜன. 12

வலிகாமம் மேற்குப்பகுதியில் உள்ள சிறிய நீர்ப்பாசனக் குளங்களை புனரமைப்புச் செய்வதற்கு ''கெயர்'' ஸ்தாபனம் முன்வந்துள்ளது.

இப்பகுதியில் உள்ள சிறுதானிய உற்பத்திக்குப் பயன்படும் ஐந்து குளங்களை அபிவிருத்தி செய்வதற்கான திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது

இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு கெயர் நிறுவனத்தின் உதவி பயன்படுத்தப்படவிருக்கிறது

[இ-99]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

க. சற்குணேஸ்வரி என்பவருடைய விசேட அடையாள அட்டை 09 01. 99 அன்று யாழ். பஸ் நிலையத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து பொ. கனகரட்ணம் கராஜ் (ரஞ்சன்) பலாலிவீதி, திருநெல்வேலி என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும்.

(62083)

இராமநாதன் கருணாகரன் என்பவருடைய விசேட அடையாள அட்டையும், வீதி அபிவிருத்தித் திணைக்கள அடையாள அட்டையும் பேர்ஸுடன்15.12. 98 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் செருக்கன் பிள்ளையார் கோயில், சாவகச்சேரி என்ற விலாசத்திற்கு அனுப்பி வைத்து உதவவும்.

(62086)

### பொருளியல்

'சர்வதேச வர்த்தகம்' நூல் விற்பனையாகிறது. ஆசிரியர்: வே. கருணகாரன்.

(62024)

### பெற்றுக்கொள்ளலாம்

நடைபெற்று முடிந்த 98 O/L English வினாப்பத்திரங்கள் தேவைப்படும் பாடசாலைகள், கல்வி நிறுவனங்கள், தனியார்கள் பெற்றுக் கொள்ளமுடியும். தொடர்பு கொள்ள வேண்டியது: திரு. ரமணதாசன் (ஆசிரியர்) இந்துக்கல்லூரி, திரு. S. கருணாகரன், (ஆசிரியர், கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி, திரு. சரா (ஆசிரியர்) N.S.A. A.R.A.

(20486)

## 10 ஆம் வருட நீங்காத நினைவலைகள்



அமரர்

### எம். சி. சுப்பிரமணியம்

(முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்)

மலர்வு 27–09–1917

உதிர்வு 12–01–1989

உரிமைக்காய்ப் போராடும் ஒடுக்கப்பட்ட
மக்களுக்கோர்
உன்னத தலைவனாய் முன்னின்று தோள்
கொடுத்தீர்
அவர் தலை நிமிர்ந்து வாழ வழிபல செய்தீர்.
கொண்ட கொள்கைக்காய்த் தியாகங்கள் பல
செய்தீர்.
இன்று வரலாறு போற்றும் நாயகனாய்த்
திகழ்கின்றீர்.
ஆண்டுகள் பத்து ஆகிடினும் இன்றும்
உங்கள் நினைவுகள் உலகெங்கும்
மீட்டப்படுகின்றன.

உங்கள் பிரிவால் துயருறும்:
**மனைவி, பிள்ளைகள்.**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

கலைப்புலவர் வீதி,
யாழ்ப்பாணம்.

(62084)

## உடன் தேவை

தமிழ் - ஆங்கில மொழிபெயர்ப்பாளர்,
ஆங்கில ரைப்பிஸ்ற்

இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். சகல வசதிகளும் செய்து தரப்படும். விண்ணப்பத்துடன் நேரில் வரவும்.

தொடர்பு:
**எஸ். கணேசன்**
(மக்கள் வங்கிக்கு முன்பாக)
**யாழ், வீதி, நெல்லியடி.**

(சி-6109)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவன்
கணேஸ்குமாரின்
அன்புத் தந்தையார்

### அ. பேரம்பலம்

அவர்களின் திடீர் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**இரண்டாம் வருட மாணவர்கள்.**
**கலைப்பீடம்.**

(62093)

## MATHS CENTRE

M. M. V. ROAD, NELLIADY.

### A/L 98 DAY CLASS

(கலை, வர்த்தகம்)

**எமது தனித்துவமான ஆசிரியர் குழு**

★ பொருளியல் — திரு. அன்ரனி.
★ அளவையியல் — திரு. பிரபானந்தன்.
★ தமிழ் — திரு. கமலரூபன்
★ இந்து நாகரிகம் — திரு. ராஜேஸ்கண்ணா.
★ கணக்கீடு — திரு. பிரபாகரன். / திரு. பார்த்திபன்.

**ஆரம்பம்: 13 - 01 - 99 புதன் 6. 00 a. m.**

**அளவையியல்**

### A/L 2001

**கலை, வர்த்தகம்**

சகல பாடங்களும் நடைபெறுகின்றன.

(சி/6108)

## கலாலயா பயிற்சியகம்

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(பெருமாள் கோயிலுக்கு அண்மையில்)

### மகளிருக்கான டிப்ளோமா மனைப்பொருளியலும் கைத்திறனும் பயிற்சிகள்

- **கேக் ஐஸிங்**
  (பட்டர் ஐஸிங், றோயல் ஐஸிங், பாச்மென்ட் ஐஸிங், புறொஸ்றிங் ஐஸிங், Fondant Icing மற்றும் மாச்சீனி அலங்காரம்)
- **உணவு தயாரித்தல்**
  (கீழைத்தேச, மேலைத்தேச உணவுகள், சிற்றுண்டிகள், புடிங் வகைகள், குளிர்பானங்கள், ஐஸ்கிறீம் வகைகள், சூப் வகைகள் தயாரித்தல் இத்துடன் உணவை அலங்கரிக்கும் முறை, மரக்கறிகளைக் குடைந்து உருவங்கள் செய்தல், மேசை அலங்காரம், உணவு பரிமாறும் விதம்)
- **உடை தயாரித்தல்**
  (குழந்தைகள், சிறுவர், மகளிருக்கான உடைகள், கதிரை விரிப்பு, தலையணை உறை தைத்தல், பூப்போடுதல்)
- **பூ வேலை**
  (ஸ்றொக்கிநெற், டிப் இன் மலர்கள் Panclay மலர்கள், பேப்பர் றிபன் மலர்கள், துணியினால் மலர்கள், மலர்ச்செண்டுகள் (Bouquete) செய்தல்)
- **கை வேலை**
  (பேப்பர் அலங்காரம், Soft Toys, வைக்கோல் வேலை, கழிவுத்துணி வேலை, கம்பளி நூல் வேலை)

ஆகிய பயிற்சிகள் பயிற்றுவிக்கப்படும். மேற்படி பயிற்சிகள் பயில்வோருக்கு இலவசமாக **கூந்தல் அலங்காரம், மணப்பெண் அலங்காரம், கோலம்** வகுப்புக்கள் நடைபெறும்.

- பயிற்சிக் காலம் 6 மாதம்.
- பயிற்சியின் முடிவில் டிப்ளோமா தகைமைச் சான்றிதழ் வழங்கப்படும்.
- இப் பயிற்சிக்கு வயதெல்லை கிடையாது.
- கிழமை நாள் பயிற்சிகள் திங்கள், செவ்வாய், புதன் ஆகிய நாள்களில் காலை 9-00 மணி முதல் பி. ப. 1-00 மணி வரை நடைபெறும்.
- சனி, ஞாயிறு பயிற்சிகள் காலை 9-00 மணி முதல் பி. ப. 2-30 மணி வரை நடைபெறும்.

**கிழமை நாள் புதிய வகுப்புக்கள் ஆரம்பம் 18 - 01 - 1999**
**சனி, ஞாயிறு புதிய வகுப்புக்கள் ஆரம்பம் 23 - 01 - 1999**
மேலும் விவரங்களுக்கு நேரில் வரவும்.

இயக்குநர்

(சி/6110)

## உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம்

### வெற்றிடம்

பின்வரும் பதவிக்கு சங்கத் தொழிற் பரப்பில் வசிப்பவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பதவி:** தட்டச்சாளர் (தமிழ், ஆங்கிலம்)

**சம்பள அளவுத் திட்டம்:**
2700 — 4000
60 X 10 — 70 X 10

**வயது:** 01–01–99 இல் 20 — 35 இடையில்

**கல்வித் தகைமை:**
தமிழ், ஆங்கிலம் உட்பட க. பொ. த. சாதாரணதரத்தில் 6 பாடங்களில் சித்தி. இத்துடன் தமிழ் தட்டச்சு 20 சொற்கள், ஆங்கிலத் தட்டச்சு 30 சொற்களுக்கு குறையாத வேகம், விண்ணப்பதாரர் வேகப் பரீட்சை செய்முறைப்பரீட்சை என்பவற்றில் தோற்ற வேண்டும்.

விண்ணப்பப் படிவத்தை சங்க அலுவலகத்தில் பெற்று, பூர்த்தி செய்து, சான்றிதழ்களின் பிரதியுடன் பொது முகாமையாளர், உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம், உடுப்பிட்டி என்ற முகவரிக்கு 27—01—99 அன்றோ அதற்கு முன்னரோ கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். தபால் உறையின் இடது பக்க மூலையில் பதவியின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

பொது முகாமையாளர்,
உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம்,
உடுப்பிட்டி.

09—01—1999

(62097)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தமிழாராய்ச்சி மாநாட்டில்

# உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு அரசு நஷ்டஈடு வழங்க வேண்டும்

## நினைவு நாள் கூட்டத்தில் கிருபைராஜா உரை

யாழ்ப்பாணம், ஜன.12

25 ஆண்டுகளுக்கு முன்னர் யாழ். முற்ற வெளியில் நடைபெற்ற தமிழாராய்ச்சிமாநாட்டின் போது உயிரிழந்தவர்களின் உறவினர்களுக்கு இழப்பீடு வழங்குவதற்கு இன்றைய அரசாங்கம் முன்வர வேண்டும்.

புளொட்டின் யாழ். மாவட்ட அமைப்பாளர் செ. கிருபைராஜா இவ்வாறு தெரிவித்தார்.

தமிழாராய்ச்சிமாநாட்டின் போது உயிரிழந்தவர்களின் நினைவாக யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் இடம் பெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றும் போது அவர் மேலும் கூறியதாவது—

இந்த நாடு சுதந்திரமடைந்த பின்னர் நாட்டை ஆண்டுவந்த பேரினவாத அரசாங்கங்கள் தமிழ் மக்களின் உரிமைகளை மறுத்து வந்தன. தமிழ் மக்கள் மீதான ஒடுக்கு முறைகளையும் அவை நடத்தி வந்தன.

அந்த வகையிலேயே சிறிமாவோ பண்டாரநாயக்காவின் ஆட்சியில் 4 ஆவது தமிழாராய்ச்சி மாநாடு நடந்து கொண்டிருந்த போது இத்தகைய வன் முறைகள் இடம்பெற்றன.

அப்பாவிப் பொதுமக்களின் உயிர்கள் அநியாயமாகப் பறிக்கப்பட்டன. அன்று தான் இனப் படுகொலைகள் முன் முதல் ஆரம்பமாகின.

தமிழ்நாட்டில் இருந்தும் மேலைத்தேய நாடுகளில் இருந்தும் தமிழை ஆராய வென முதுபெரும் அறிஞர்கள் முற்றவெளியில் கூடியிருந்த போது — தமிழின் பெருமையை எடுத்துக் காட்டிய இந்த மாநாடு நடந்து கொண்டிருந்த போது — சீருடை தரித்த பாதுகாப்புப் படையினர் தமது வாகனங்களைக் கூட்டத்தினுள்ளே செலுத்தி கண்மூடித்தனமாக தாக்குதலை மேற்கொண்டனர்.

அன்று ஓட ஆரம்பித்த இரத்த ஆறு இன்று வரை தொடர்ந்து ஓடுகின்றது.

இதுமட்டுமல்ல அடுத்து வந்த ஐ.தே.கட்சியின் ஆட்சியில் தெற்காசியாவில் புகழ் பெற்ற நூல் நிலையமான யாழ்ப்பாணம் பொது சன நூலகம் காடையர்களால் தீக்கிரையாக்கப்பட்டது.

இந்த நாட்டில் இருந்து தமிழ் மக்களை இல்லாது செய்வதற்காகவே பேரினவாத அரசாங்கங்கள் செயற்பட்டு வந்தன. இன்றும் அந்தப் பேரினவாதப் போக்குக் குறையவில்லை.

இன்று யுத்தத்தில் காயமடையும் படையினருக்கும் உயிரிழந்த படையினரின் உறவினர்களுக்கும் அரசாங்கம் பல உதவிகளைச் செய்து வருகின்றது. எனினும் தமிழாராய்ச்சி மாநாட்டின் போது உயிரிழந்தவர்களின் உறவினர்களுக்கு எந்த விதமான உதவிகளும் வழங்கப் படவில்லை.

யுத்தத்தால் பாதிக்கப் பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்கப்படுவது போன்று இவர்களுக்கும் இழப்பீடு வழங்கப்பட வேண்டும் என்று கோருகின்றோம்.

சூரியகந்த, பட்டலந்த போன்றவற்றைத் தோண்டிய இன்றைய அரசாங்கம் செம்மணியைத் தோண்டுவதற்குப் பின்னடித்து வருவது எமக்கு சந்தேகத்தை உண்டு பண்ணுகின்றது. செம்மணிப் புதை குழிகள் விரைவில் தோண்டப்பட வேண்டும்.

எமது பிரச்சினைகளுக்கு ஒரு நியாயமான தீர்வு எட்டப்பட வேண்டும் என்றால் நாம் அனைவரும் ஒன்றுபட வேண்டும். எமக்கிடையிலான வேறுபாடுகளைக் களைந்து எமது உரிமைகளுக்காக இணைந்து குரல் கொடுக்க வேண்டும்.

அதனை விடுத்து நாம் நம்மிடையே பிளவுபட்டு நிற்பது நாங்கள் உரிமைகளைப் பெறுவதற்குத் தகுதியுடையவர்களா என்று கருத வைக்கின்றது.

தமிழாராய்ச்சி மாநாட்டு அசம்பாவிதங்களின் போது உயிரைக் கையில் பிடித்தபடி ஓடிய தமிழ் மக்களின் ஓட்டம் இன்று நாடளாவிய ரீதியிலும் உலகளாவிய ரீதியிலும் தொடர்ந்து வருகின்றது.

எனவே தொடரும் அழிவுகளுக்கு முடிவுகட்டுவதற்கும் அவற்றைத் தடுப்பதற்கும் இன்றைய நாளில் நாம் அனைவரும் ஒன்றாக உறுதி எடுத்துக் கொள்வோம்.

இப்படி அவர் தெரிவித்தார்.

ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் யோகன் பேசுகையில் 25 ஆண்டுகளுக்கு முன் அன்றைய ஆட்சியாளர்கள் கட்டவிழ்த்துவிட்ட அடக்கு முறை காரணமாக இன்று நாடு முழுவதும் இனப்பிரச்சினையில் சிக்கித் தவிக்கின்றது.

இது போன்ற படுகொலைகளைக் கண்டிக்கும் அதே வேளை, இவ்வாறான கொலைகளை கண்டிப்பதற்கு மக்களைத் தூண்ட வேண்டியதும் எமது கடமையாகும். இந்தநிகழ்விற்குப் பின்னரும் இவ்வாறான நிகழ்வுகள் படுகொலைகள் நடத்தப்பட்டுள்ளன என்றார்.

இந்த நிகழ்வில் தமிழர் விடுதலைக் கூட்டணி யாழ். மாநகர சபை உறுப்பினர் சார்பில் கந்தையனும் ரெலோ அமைப்பின் சார்பில் வல்வெட்டித்துறை நகரசபை உப தலைவர் சந்திரசேகரனும் உரையாற்றினார்கள்.

(இ)

---


## நகரசபை, சாவகச்சேரி.

## பதவி வெற்றிடங்கள்

சாவகச்சேரி நகரசபையில் சந்தை வரி வசூலிப்பவர்கள், சுகாதாரத் தொழிலாளர்கள் பதவி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பின் பொருட்டு கீழ்க்குறிக்கப்படும் தகைமைகளைக் கொண்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பொதுத் தகைமைகள்:**

1) சாவகச்சேரி நகரசபை அதிகார எல்லைக்குள் குறைந்த பட்சம் மூன்று வருடம் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டவராக இருத்தல் வேண்டும். (வதிவிட அத்தாட்சி சமர்ப்பிக்க வேண்டும்)

2) விண்ணப்ப முடிவு திகதியில் 18 வயதுக்கும் 45 வயதுக்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும். அரச/உள்ளூராட்சி சேவையில் இருப்பவர்களுக்கு இவ்வயதெல்லை பொருந்தாது.

3) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

4) நல்லொழுக்கமும் ஆரோக்கியமுமுடையவராக இருத்தல்வேண்டும்.

5) குற்றவியல் சட்டத்தின் மூலம் நீதிமன்றத்தால் தண்டிக்கப்படாதவராக இருத்தல் வேண்டும்.

**01. அமய சந்தை வரி வசூலிப்பவர் பதவிகள்**

அ. கல்வித்தகைமைகள்
இரு தடவைகளுக்கு மேற்படாமல் கணிதம்/எண் கணிதம்/ வர்த்தக கணிதம் அத்துடன் சிங்களம்/ தமிழ்மொழி உட்பட ஆறுபாடங்களில் சி. பா. த. அல்லது க. பொ. த. (சாதாரணதர) பரீட்சையில் சித்தி அல்லது ஒரே தடவையில் கணிதம், சிங்களம்/ தமிழ்மொழி உட்பட ஆறு பாடங்களில் தே. க. பொ. த. பரீட்சையில் சித்தி யெய்தியிருத்தல் வேண்டும்

ஆ. சம்பளத் திட்டம்:
நாளொன்றுக்கு ரூபா 131 வீதம்

**02. சுகாதாரத் தொழிலாளிகள் பதவிகள்:**

அ. கல்வித் தகைமைகள்;
ஆகக்குறைந்தது 5 ஆம் தரத்தில் சித்தியெய்தி இருத்தல் வேண்டும்.

ஆ. சம்பளத் திட்டம்-
ரூ 40,800 — 20/960 — 60,000/- (ரி 1.1)

**அனுபவம்:**
நகரசபையில் தற்காலிக பதவிகளில் கடமையாற்றுபவர்களுக்கு சேவை மூப்பின் அடிப்படையில் முன்னுரிமை வழங்கப்படும்.

**விண்ணப்பங்கள்:**
**28-01-1999** ஆம் திகதிக்கு முன்னதாக இவ்வலுவலகத்தில் ரூபா 10 செலுத்துவதன் பேரில் வழங்கப்படும் விண்ணப்பப்படிவத்தை பெற்று பூர்த்தி செய்து சமர்ப்பித்தல் வேண்டும்.

இது தொடர்பான ஏனைய விவரங்களை இவ்வலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

**மு. செ. சரவணபவ**
**செயலாளர்**
**நகரசபை, சாவகச்சேரி.**

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி,
11 - 01 - 1999

(சி/6114)


---

## சில அத்தியாவசிய...

(முதலாம் பக்கத் தொடர்)

கடந்த காலங்களில் அரச அதிபரிடமும் கூட்டுறவுச் சமாசத் தலைவரிடமும் அவர்கள் வாடகைக்கு அமர்த்தும் கப்பல்களில் சிறு வர்த்தகர்கள் உட்பட சகல வர்த்தகர்களுக்கும் இட ஒதுக்கீடு வழங்கும்படி கேட்டபோது அதனை அவர்கள் நிராகரித்து குறிப்பிட்ட சில பெரிய வர்த்தகர்களுக்கு மட்டும் இடஒதுக்கீடு வழங்கப் பட்டு சாமான்கள் கொண்டு வரப்பட்டன. அப்படிக் கொண்டுவரப்பட்ட பொருள்களின் விலை அப்பெரிய வர்த்தகர்களாலேயே தீர்மானிக்கப்பட்டு சில்லறை வர்த்தகர்களுக்கு வழங்கப் பட்டன ஆகவே சில்லறை வர்த்தகர்கள் எப்போதும் பெரிய வர்த்தகர்களின் தயவிலேயே தங்கி இருந்தனர். இப்படியான செயற்பாட்டைத் தவிர்த்து சகல வர்த்தகர்களும் பொருள்கள் கப்பலில் இறக்குவதற்கு வாய்ப்பாக அரச அதிபரோ, சமாசத் (கூட்டுறவு) தலைவரோ குறிப்பிட்ட அளவு இட ஒதுக்கீட்டைச் சிறு வர்த்தகர்களுக்கும் வழங்குவார்களாக இருந்தால் யாழ். மாவட்டத்தில் சகல வர்த்தகர்களும் கொழும்பிலிருந்து பொருள்களைக் கொண்டுவரும்போது இவற்றின் விலை வீழ்ச்சி அடையும் என்பதனை அரச அதிபர், கூட்டுறவுச் சமாசத் தலைவர், ஆகியோர் முன்னிலையில் புனர்வாழ்வு அமைச்சின் தலைவர் திரு. சோமபால குணதிர அவர்கள் யாழ். வந்தபோது எமது சம்மேளனம் சுட்டிக்காட்டியது. ஆனால் இது விடயத்தில் எதுவித முன்னேற்றமும் ஏற்படவில்லை.

மேலும் இந்த விடயம் தொடர்பாக யாழ். இணைப்பு அதிகாரியுடனும், மேலதிக அரச அதிபருடனும் சென்ற மாதம் நாம் நடத்திய கலந்துரையாடலில் விலை ஏற்றத்தைச் சுட்டிக்காட்டி அதைத் தடுப்பதற்கு விலைக் கட்டுப்பாட்டு அதிகாரிகளைப் பயன்படுத்தும் படி கேட்டிருந்தோம். இவற்றிற்கு அரச இயந்திரங்கள் ஒத்துழைப்பு வழங்காதபோது வர்த்தக சங்கங்களோ, வர்த்தக சம்மேளனமோ விலைக் கட்டுப்பாட்டை அமுல் செய்வது குதிரைக் கொம்பு.

மேலும் கூட்டுறவுச் சமாசம் தாங்கள் வாடகைக்கு அமர்த்திய கப்பலை முழுமையாகப் பயன்படுத்தி பொருள்களைக் கொண்டு வந்து பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் பொருள்களை நுகர்வோருக்கு விநியோகித்திருந்தால் தற்போதைய விலை உயர்வை ஓரளவு கட்டுப்படுத்தி இருக்கலாம் என்பதனை நுகர்வோருக்கு நாம் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

கொழும்பில் இருந்து எமது வர்த்தகர்கள் சாமான்கள் கொண்டு வருவதற்கு கொழும்பில் இரு கப்பல் முகவர்கள் மட்டும் இருக்கின்றார்கள். அவர்கள் தாங்கள் விரும்பியவர்களுக்கே சாமான்கள் அனுப்புவதற்கு உதவுவதாகவும், மற்றைய வர்த்தகர்கள் பின்தள்ளப்படுவதாகவும் பல முறை வர்த்தகர்கள் கூறியதை நாம் புனர்வாழ்வு அமைச்சிற்கு சுட்டிக்காட்டி கப்பல் முகவர்களை மேலும் அதிகரிக்கும்படி கேட்டிருந்தோம். அதற்கும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

கொழும்பிலிருந்து பொருள்கள் கப்பலில் அனுப்பப்படும் போது கப்பலில் வரும் பொருள்கள் சில களவாடப் படுவதனால் அதனையும் கட்டுப்படுத்தும் படி நாம் புனர்வாழ்வு அமைச்சிற்குக் கூறியபோதும் இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எமது வர்த்தகர்களால் ''பிறின்சஸ் காஷ்'' கப்பலில் கொண்டுவரப்பட்ட பொருள்கள் அரசாங்கத்தால் குண்டு வீசி அழிக்கப்பட்டன. இதனால் நாற்பதுக்கும் மேற்பட்ட வர்த்தகர்கள் ஐம்பது கோடி ரூபா வரை இழந்துள்ளனர். இதற்கு ஜனாதிபதி, யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோருக்கு விண்ணப்பித்தும் இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இப்படியான இடர்ப்பாடுகளுக்கு மத்தியில் எமது வர்த்தகர்கள் தள்ளாடி யாழ். மக்களுக்கு தங்களின் சேவையை ஆற்றி வருவதனை நுகர்வோ

(10 ஆம் பக்கம் பார்க்க)

---


யாழ். மாவட்ட
வர்த்தகர் சங்கங்களின் சம்மேளனம்

## அதிர்ஷ்டலாபச் சீட்டு

பற்றிய

## அறிவித்தல்

யாழ். மாவட்ட வர்த்தகர் சங்கங்களின் சம்மேள
னத்தால் தைப்பொங்கல் தினத்தன்று அதிர்ஷ்டம்
பார்க்க இருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டு தவிர்க்க முடி
யாத காரணத்தால் சித்திரை வருடப்பிறப்பன்று
அதிர்ஷ்டம் பார்ப்பதற்காக பிற்போடப்பட்டுள்ளது.
இக் காலம் வரை மீதியாகவுள்ள அதிர்ஷ்டலாபச்
சீட்டுக்களை விற்பனை செய்யும்படி சகல வர்த்தகர்
சங்கங்களையும், வர்த்தகர்களையும் அன்புடன் கேட்
டுக் கொள்ளுகின்றோம்.

**யாழ். மாவட்ட வர்த்தகர் சங்கங்களின் சம்மேளனம்**
இல. 27, நவீனசந்தை (மேல்மாடி),
யாழ்ப்பாணம்.
(சி/6116)


---


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

எமது பாடசாலை அதிபர்
க. சண்முகராஜா
அவர்களின் தந்தையார்

## வீரகத்தியர் கதிர்காமு

அவர்களின் மறைவு குறித்து ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கிறோம்.

**ஆசிரியர்கள், மாணவர்கள்.**
**தாழையடி றோ. க. த. க, பாடசாலை.**
**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.**
**கட்டைக்காடு றோ. க. பாடசாலை.**
(சி/6112)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சில அத்தியாவசிய...

(9 ஆம் பக்கத் தொடர்ச்சி)
ருக்குச் சுட்டிக்காட்ட வேண்டியது எமது கடப்பாடு. இருப்பினும் யாழ். மக்கள் தற்போது அனுபவிக்கும் கஷ்ட நிலையில் அவர்களுக்குச் சுமையை மேலும் ஏற்றாது சகல வர்த்தகப் பெருமக்களும் அத்தியாவசியப்பொருள்களின் விலையை நிதானத்துடன் விற்று யாழ். மக்களின் நன்மதிப்பைப் பெற்று வாழ வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றோம்.

மொத்த வியாபாரிகள் இருவரிடம் இன்று நாம் பெற்ற அத்தியாவசியப் பொருள்களின் தற்போதைய விலையை இங்கு சூறிப்பிட்டு இவ்விலையை அனுசரித்து மற்றவர்கள் விற்கவேண்டுமென அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

பொருள்களும் அவற்றுக்கான சில்லறை விலைகளும் வருமாறு;

★ அரிசி— ரூ. 34
★ சீனி— ரூ. 40
★ சர்க்கரை— ரூ, 55
★ பயறு— ரூ. 52
★ உழுத்தம்பருப்பு ரூ. 60
★ செத்தல் (தரம்—1) ரூ. 210
★ மல்லி (தரம்—1) ரூ, 64
★ தேயிலை— ரூ. 160
★ தேங்காய் எண்ணெய் (லீற்றர்) ரூ 82

—இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

## இளைஞனின்...

(முதலாம் பக்கத் தொடர்)
யாழ். போதனா வைத்தியசாலையில் அச்சுவேலிப் பொலீஸாரினால் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அடையாளம் காண்பதற்காக இச்சடலம் யாழ். வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது,

சுற்றிவளைப்பின் போது இவர் Tகிரனேட் வெடிக்க வைத்து உயிரிழந்ததாகக் கூறப்பட்டது.

(ஐ-5-15-139-173)

## ஒரு வாரத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்)
நம்பியுள்ளனர். ஆனால் அது அடிக்கடி தடைப்படுவதால் அவர்கள் பல்வேறு அவஸ்தைகளுக்கும் ஆளாகின்றனர். இந்நிலை தவிர்க்கப்பட வேண்டும் — என்று அந்த 'பக்ஸ்' செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(அந்த 'பக்ஸ்' செய்தியின் முழு விவரம் பின்னர் உதயனில் வெளியாகும்)

(ஐ-6-15-5)

## தொலைபேசி...

(முதலாம் பக்கத்தொடர்)
தெரிவித்தார்.

வெளியிடங்களுக்கான தொலைபேசிச் சேவைகள் அடிக்கடி தடைப்பட்டுப் போவது தொடர்பாக பொது மக்கள் தெரிவித்துவரும் முறைப்பாடுகள் குறித்துக் கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

புதிய இணைப்புக்களைஏற்படுத்துவதில் உள்ள தொழில் நுட்பக் காரணங்களினாலேயே தற்போது தொலைபேசிச் சேவை அடிக்கடி தடைப்படுகிறது. புதிய இணைப்பு வேலைகள் இம்மாத இறுதிக்குள் முடிவடைந்ததும் இச்சேவைகள் சீராகும்.

கடந்த ஆண்டு 700 தொலைபேசி இணைப்புகள் வழங்கப்பட்டன. இவ்வாண்டு ஆயிரம் இணைப்புகளை வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது —என்றும் அவர் தெரிவித்தார்.

(ஐ-5)


# பொருளியற் கல்லூரி

நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

**A/L 2000**

**பொருளியல்**
S. வரதராஜன் B.A (Hons)

சனி, ஞாயிறு
8 — 9 சந்தைச் சமநிலை
9 — 10 தேசிய வருமானம்

ஆரம்பம்: **16 - 01 - 1999** சனிக்கிழமை

★ 31-01-99 க்குப் பின்னர் இப்பிரிவுக்கு அனுமதிகள் வழங்கப்படமாட்டாது.

(62108)

வடபிராந்திய
# சிகை அலங்கரிப்பாளர் சங்கம் அறிவித்தல்

எதிர்வரும் தைப்பொங்கல் திருநாளை முன்னிட்டு சகல சிகை அலங்கரிப்பு நிலையங்களும் 13-01-1999 புதன்கிழமை திறக்கப்பட்டு 15-01-1999 வெள்ளிக் கிழமை (பொங்கல் தினம்) மூடப்பட வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

நன்றி

அ. அல்பேட்
தலைவர்

சிறீராஜன்
செயலாளர்

30, நவீன சந்தை மேல்மாடி,
யாழ்ப்பாணம்.

(62103)

**(764)**
# பாடசாலை ஊர்தி சேவை

எமது VAN [33 ஸ்ரீ 8120] ஆண்டு 1—3 வரை கற்கும் மாணவர்களுக்கு, புன்னாலைக் கட்டுவனில் இருந்து யாழ். இந்து மகளிர் கல்லூரி, யாழ். இந்து ஆரம்ப பாடசாலை, ஜோன் பொஸ்கோ என்பவற்றினூடாக சென். ஜோன்ஸ் கல்லூரி வரை சேவை வழங்குகின்றது.

தொடர்பு முகவரி:
**வரதன் கொமினிகேஷன்**
புன்னாலைக்கட்டுவன் (62085)



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12-01-1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.


## போதைப் பொருள்

(முதலாம் பக்கத் தொடர்)
ஒன்றரை வருட கால சிறைத் தண்டனை முடிந்து கடந்த இரு வாரங்களுக்கு முன்னரே விடுதலையானவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மரண வீடு ஒன்றுக்குச் செல்லும் வழியில் இவர் மீது கிரனேட் வீசப்பட்டு துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டது.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பாக மோகன் என்ற தமிழர் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

## யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்)
சதி செய்து வருகிறார்கள்: பிரதேச செயலாளர்கள், பிரதேசசபைகளைச் சேர்ந்த செயலாளர்கள், ஆணையாளர்கள் ஆகியோரும் இவர்களில் அடங்குவர்—

படையினர் யாழ். குடாநாட்டைக் கைப்பற்றுவதற்கு முன்னர் விடுதலைப்புலிகளின் நிர்வாகப் பிரிவினருக்கும் இந்த அதிகாரிகளே பயிற்சி வழங்கி வந்தனர். உள்ளூராட்சி நிறுவனங்கள் தொடர்பான தகவல்கள் பாதுகாப்பு அதிகாரிகளுக்கும்மூத்த சிவில் அதிகாரிகளுக்கும் இடையே இடம்பெறும்பேச்சுவார்த்தைகள் தொடர்பான தகவல்கள் என்பவற்றை இந்த அதிகாரிகளே விடுதலைப் புலிகளுக்கு வழங்கி வருகின்றனர்.

இவ்வாறு அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

(ஐ-10)

## ஓமந்தை...

(முதலாம் பக்கத் தொடர்)
தற்போது நடைபெற்று வருகின்றன.

மின் விஸ்தரிப்புப் பணியைத் தடுக்கவே இத்தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என்று மின்சார சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இம்மின் கோபுரத் தகர்ப்பினால் மின்சார சபைக்கு சுமார் 2 இலட்சம் ரூபா இழப்பு ஏற்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

(ஐ-6-21)

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்)
டுள்ளது—என்று அமைச்சர் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை —

தாய்லாந்தின் மேர்கித் தீவையும், இந்து சமுத்திரத்தின் கரையோரப் பகுதிகளையும் புலிகள் 1996 ஆம் ஆண்டு முதல் தங்கள் தளங்களாகப் பயன்படுத்தி வருகின்றனர் என்று இராணுவப் பேச்சாளர்பிரிகேடியர் சுனில் தென்னக்கோன் கூறியதாக 'த நேஷன்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

புலிகள் சொந்தமாக வர்த்தகக் கப்பல்களை வைத்துள்ளனர்.

ஆயுதங்களைக் கடத்தும் நவீன வலையமைப்புக்களையும் அவர்கள் ஏற்படுத்தி உள்ளனர். புலிகள் ஆயுதங்களைக் கம்போடியா ஊடாகப் பெற்று இலங்கைக்கு அனுப்புகின்றனர் என அவர் மேலும் கூறியதாக அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

இலங்கை அரசு சுமத்தியுள்ள குற்றச் சாட்டைத் தாய்லாந்து அரசு மறுத்துள்ளதாக 'றோய்ட்டர்' செய்தி நிறுவனம் தெரிவித்தது.

தாய்லாந்து அரசு அரசியல் ரீதியிலோ, இராணுவ ரீதியிலோ விடுதலைப் புலிகளுடன் எதுவித தொடர்புகளையும் வைத்திருக்கவில்லை என்று தாய்லாந்து இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

(ஐ-6-21)

## ஓட்டோ...

(முதலாம் பக்கத் தொடர்)
இச்சம்பவம் கடந்த சனியன்று இடம் பெற்றது.

ஓட்டோச் சாரதி நேற்று முன்தினம் காலை வீடு வந்து சேர்ந்துள்ளார்.

ஓட்டோ கடத்தப்பட்டது பற்றி சாவகச்சேரி பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது.

(ஐ-117)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# நீதியான தீர்வு கோரி சர்வமதப் பிரார்த்தனை

## ஞாயிறன்று நடக்கும்

ஈழத் தமிழர் பிரச்சினைக்கு சுய கௌரவத்துடன் கூடிய நீதியும், அமைதியும் மிக்க தீர்வு கிடைக்க வேண்டுமெனக் கோரி யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையமும், மனித நேய அமைப்புக்களின் ஒன்றியமும் இணைந்து சர்வமதப் பிரார்த்தனை ஒன்றினை நடத்தவுள்ளன.

எதிர்வரும் 17 ஆம் திகதி காலை 10 மணிக்கு யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலக வளவில் இந்தப் பிரார்த்தனை நிகழ்வை நடத்த ஏற்பாடாகி வருகிறது.

இந்து, கிறிஸ்தவ மதகுருமார்கள் தலைமையில் இந்த சர்வமதப் பிரார்த்தனை நடைபெறும்.

சர்வமதப் பிரார்த்தனையின் இறுதியில் அறிக்கை ஒன்றும் வெளியிடப்படவுள்ளது.

(ஐ-5)

## வீதி திருத்தப்படுகிறது

மூளாய், ஜன. 12

பண்ணாகம் இரண்டாம் குறுக்குத்தெரு புனரமைக்கப்பட்டு வருகிறது. நீண்ட காலமாக திருத்தப்படாமல் மிகவும் பாதிப்புற்ற நிலையில் காணப்படும் இந்த வீதி புனரமைக்கப்படுவதால் இப்பகுதி மக்கள் பயனடையவுள்ளனர்.

(இ-99)

## 6 பேர் மட்டும்...

(முதலாம் பக்கத் தொடர்)
நான்கு பாடங்களிலும் 'ஏ' சித்தி பெற்றுள்ளனர்.

யாழ். மாவட்டத்தைப் பொறுத்த வரை பாடசாலைப் பரீட்சார்த்திகளின் பெறுபேறுகளே நேற்று வெளியிடுவதற்குத் தயாராக இருந்தன.

யாழ். மாவட்டத்தின் தனியார் பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள்இன்னும் இரண்டொரு நாள்களில் வெளியிடுவதற்குத் தயாராகப் பட்டியலிடப்பட்டு விடும் என்றும்-

அதன் பின்னர் அவற்றுடன் சேர்த்து யாழ். பாடசாலைப் பெறுபேறுகளையும் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும்—

பரீட்சை ஆணையாளர் தெரிவித்தார்.

எமது செய்தியாளர் பரீட்சைத் திணைக்கள வட்டாரங்களுடன் தொடர்பு கொண்டு, யாழ் மாவட்டப் பாடசாலைகளில் 3 'A' பெறுபேற்றுக்கு மேல் பெற்றமாணவர்கள் அனைவரினதும் பெயர் விவரங்களை நேற்றிரவு தெரியப்படுத்தினார். எனினும் அவர்கள் என்னென்ன துறை சார்ந்தவர்கள் என்ற விவரம் கிடைக்கவில்லை.

பாடசாலை ரீதியாக 3 'A' பெறுபேற்றுக்கு மேல் பெற்றோர் விவரம் வருமாறு:

**ஹாட்லி**
முருகுப்பிள்ளை மகேஸ்வரன், தங்கராஜா பிரதீபன் — இருவரும் — 4A.
இராஜேந்திரா விமலன், விஜயசிங்கம் கோகுலசிங்கம், மாணிக்கவாசகர் ரமணன் மூவரும் — 3AB.
சிவஞானசுந்தரம் ஸ்ரீபதி — 3AC.

**வேம்படி**
குணராஜா பிரதீபா, சண்முகசுந்தரம் சிந்துஜா — இருவரும் — 4A.
பாலசுப்பிரமணியம் கல்யாணி — 3AB.

**யாழ். இந்து**
கிருஷ்ணபிள்ளை குருபரன் — 4A.
புவனேந்திரன் நிஷாந்தன் — 3AB.
வில்வராஜர் கணேஸ்வரன் — 3AC.

**உடுப்பிட்டி அ. மிஷன் கல்லூரி**
செல்லத்துரை சுதர்சன் — 4 A.
அரியநாயகம் தயாபரன் — 3 AB.

**சாவகச்சேரி இந்து**
கணபதிப்பிள்ளை கவிதாகரன், தில்லைநாதன் சுகந்தினி, பிரான்ஸ் தவராஜா ரோணி சஞ்சீவ், கௌசல்யா சௌந்தரராஜன், கல்பனா கனகலிங்கம், ஜமுனா சந்திரசேகரம், ஜெனிதா வதனி ஜேசுதாசன் ஏழுபேரும் — 3 AB.
முகுந்தன் நடராஜா, சுப்பிரமணியம் சிவரூபன் இருவரும் 3 AC.
யசோதா இந்திரராஜா — 3AS.

**யாழ் இந்து மகளிர்**
ராஜரட்ணம் வத்சலா, கிருஷ்ணராஜா யாழினி — இருவரும் — 3AC.

**கரவெட்டி ஞானாசிரியர் கல்லூரி**
அழகரட்ணம் ஜீவா — 3AC.

**சுண்டுக்குளி மகளிர்**
சந்திரன் சாமினி — 3AB.

**அத்தியார் இந்து**
கந்தையா சிவராஜா—3AB,

**மகாஜனா**
நவரத்தினம் சத்தியநிதி — 3 AB.

**பருத்தித்துறை மெதடிஸ்**
சுவாமிநாதன் மேரி லியோனி — 3AB.

**கனகரத்தினம் ம.ம.வி**
விநாயகமூர்த்தி விக்னாகரன் — 3AB.

**புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா**
நடராஜா பஞ்சசீலன் — 3AC.

**சென். ஜோன்ஸ்**
குகதாஸ் சுதர்சன் — 3AB.

**யூனியன் கல்லூரி**
அருளம்பலம் போல் சயந்திரன், சத்தியமூர்த்தி வெங்கடேசன், திருநாவுக்கரசு சபீத்தா மூவரும் — 3AB.

**வடமராட்சி இந்து மகளிர்**
ஸ்ரீஸ்கந்தராஜா கதிர்காமவல்லி, இராசதுரை திருமகள் இருவரும் — 3AC.

**விக்ரோறியா**
இரட்ணசிங்கம் வாகீசன் — 3AB.
சின்னையா ரதிவதனி — 3AC.

**கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி**
நவரத்திலம் முகிந்தா — 3AC.

**நெல்லியடி ம. ம. வி.**
தர்மகுலசிங்கம் ஷண்முகப்பிரியா — 3AB.
கணேசமூர்த்தி உதயசீலன் — 3AC.

**சென்ஹென்றீஸ்**
றிமுந்துப்பிள்ளை அலெக்ஸ் அங்கிலிற்றோ — 3AB.

**ஸ்கந்தா**
ராஜரத்தினம் ஜானக—3AB

**கொக்குவில் இந்து**
குமுதினி கமலசிங்கம் —3AB

**மானிப்பாய் இந்து**
சரவணபவன் ஆதவன் —3AB.

**யாழ்ப்பாணக் கல்லூரி**
சுதர்சனா மகேந்திரன், சண்முகம் சசிபன் இருவரும் —3AB.

(உ)

## இன்ஸ்பெக்டர்...

(முதலாம் பக்கத் தொடர்)
டர், சார்ஜன்ட் மற்றும்ா ஹாடி தொழில் நுட்பக் கல்லூரி ஊழியர் ஒருவர் ஆகியோரே நீரில் மூழ்கினர். இந்த ஊழியரின் சடலம் மட்டுமே மீட்கப்பட்டதாக இச்செய்தி அச்சுக்குப் போகும் முன்னர் தகவல் கிடைத்தது. இச்சம்பவத்தில் 3 பொலீஸார் உட்பட நால்வர் நீந்திக் கரைசேர்ந்தனர்.

குளத்தில் படகுச் சவாரியில் ஈடுபட்டிருந்த இவர்கள் அங்கு குளித்துக் கொண்டிருந்த யானை ஒன்றிடம் இருந்து தப்ப முயற்சித்தவேளை யானை படகைத் தூக்கி வீசியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-21)